# ஆரிய வேதங்கள்

★

ஆசிரியர்.
யாழ்ப்பாணத்து நவாலியூர்
திரு. ந. சி. கந்தையா பிள்ளை

பதிப்பாளர்
முத்தமிழ் நிலையம்
சென்னை

புரிமை]

[விலை அணா 10

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் ... ... | 5 |
| 2. | ஆரியர் ... ... | 9 |
| 3. | கலப்பற்ற ஆரியர் உளரா? ... ... | 10 |
| 4. | வேதபாடல்களின் தொடக்கம் ... | 10 |
| 5. | நான்கு வேதங்கள் ... ... | 11 |
| 6. | வேதங்களில் கூறப்படும் கடவுளர் .. | 13 |
| 7. | வேதம் என்னும் பெயர் ... ... | 15 |
| 8. | மந்திரங்கள் மறையாதல் ... ... | 17 |
| 9. | வேதங்கள் கடவுளாற் சொல்லப்பட்டன என்ற மயக்கம .. ... | 19 |
| 10. | தேவார திருவாசகங்கள் சொல்வதால் வேதங் கள் கடவுள் வாக்காகுமா? .. | 21 |
| 11. | தமிழருக்கு ஆரிய வேதஙகள் முதல நூலகளாகுமா? ... ... | 23 |
| 12. | வேதபாடலகளில சில ... ... | 25 |
| 13. | வேதபாடல்கள் எவ்வாறு பயன்படத்தக்கன. | 26 |
| 14. | யாகங்கள் ... ... | 27 |
| 15. | சோமயாகம ... ... | 23 |
| 16. | நரமேதம் ... ... | 30 |
| 17. | அசுவமேத யாகம் ... ... | 32 |
| 18. | வேதகாலமக்கள் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம் ... ... | 33 |
| 19. | உருத்திரன் ... ... | 34 |
| 20. | பசு இறைச்சி குதிரை இறைச்சிகள் ஆரிய ருக்கு விலக்கு இலலே ... | 37 |
| 21. | கிருட்டிணர்கள் ... ... | 38 |
| 22. | பாணியர் ... ... | 40 |
| 23. | பிராமணங்கள் ... ... | 40 |
| 24. | ஆரணியகங்கள் ... ... | 42 |
| 25. | உபநிடதங்கள் ... ... | 43 |
| 26. | புராணங்கள் ... ... | 45 |
| 27. | கணவனிறந்த பெண்களை உயிரோடு கொளுத் தம்படி கூறும் வேத மதம் ... | 47 |

# முன்னுரை

ஆரியர் தமிழரின் சமயம, ஆரியர் தமிழர், ஆரியம தமிழ என்பவைகளின் ஆராய்ச்சி, ஒரு கூட்டத்தவரின் வாழ்வைப் பாதிக்கின்றது. வேதங்கள் கடவுளாற் சொல்லப்பட்டவை; பிராமணர் பிரமாவின் முகத்திலிருந்து தோன்றினோர்; சமக்கிருதம் தேவர்கள் பேசும மொழி; அம்மொழியில் சொலலாதவைகளைத் தேவர் அறிந்து கொள்ளமாட்டார்; ஆகவே மக்களின் எண்ணங்களைக் கடவுளருக்கு அவர் விளங்கக் கூடிய மொழியில கூறுதல வேண்டும். அவ்வாறு கடவுளர் எண்ணங்களைப் பொதுமககளுக்கும, பொதுமக்களின் எண்ணங்களைக் கடவுளருக்கும, உணர்த்துவோராகிய தாம் பூதேவர் என்பனபோன்ற பொய்யான பொல்லாத கருத்துக்களை மக்களிடையே பரவச் செய்து, அவாகளின் அறியாமை மூலம் உலகில் மதிப்பும் நல் வாழ்வும் பெற்று வாழும் ஒரு கூட்டத்தினர், மேற்படி கருத்துக்களுக்கு மாறான ஆராய்ச்சிகளை வெளியிட விரும்ப மாட்டார்களல்லவா? ஆகவே அவர்களால் எழுதப்பட்ட, எழுதப்படும் நூல்களில் தமிழரின் உயர்வுகளைக் கூறவேண்டிய பகுதிகள் காணப்படுவதில்லை அவர்களைப்பற்றிக் கூறவேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டால், அவர்கள் அரக்கர், இராக்கதர், பேய்கள், பைசாசுகள் எனக் கூறப்படுவர். இதனால் தென்னிந்திய மக்களைப் பற்றிய உண்மை வரலாறுகள் வெளிவராதிருந்தன.[1]

---

[1] At any rate we may be on our guard against looking at everything through Aryan or Brahmanical Specatakles...... that almost everything has passed into written form has been cast in an Aryan mould. For real history the Brahmanic writers never cared anything.........everything about non-Aryan race is either omitted or only noticed the conquest of the 'twice born' over the 'demons' and barbarians. —Village community· P· 91—B.H. Baden Powell M.A.C.I.E.

மேல்நாட்டவர்கள தென்னிந்திய மக்களின் மேலான நாகரிகத்தை விளக்கிப் பல ஆராய்ச்சிகள் செய்துளளார்கள. மொகஞ்சதரோ அரப்பா முதலிய தமிழரின் பழைய நகரங்களின் நாகரிகத்தைப் பற்றி மேல்நாட்டு வெளியீடுகளில் பல ஆராய்ச்சிகள் வெளிவந்துள்ளன. அவைகள் போன்றவை தமிழ்நாட்டில் வெளிவருவதில்லை. இதற்குக் காரணம், தமிழர் நாகரிகம் ஆரியர் நாகரிகத்திற்கு முற்பட்டதென்றும், அந்நாகரிகத்தை அடிப்படையாகக் கொண்டே ஆரிய நாகரிகம் கட்டப்பட்டுள்ளது என்றும், பொதுமக்கள் அறியின், அது ஒரு கூட்டத்தினரின் வாழ்வுக்குப் பங்கமாகு மென்பது பற்றி ஆகலாம்.

நாம், உண்மையான தமிழர். ஆரியர் வரலாறுகளைப் படிக்க வேண்டுமாயின், மேல்நாட்டறிஞரால எழுதப்பட்டவைகளையே படித்தல் வேண்டும். மேல்நாட்டறிஞரால் எழுதப்படும் உண்மை ஆராய்ச்சிக்கும், பிராமண வகுப்பினரால் எழுதப்படும் ஆராய்ச்சிகளுக்கும் வேறுபாட்டைக் காணலாம். பின்னவரிடத்தில் தமிழரிலும் பார்க்க ஆரியரே நாகரிகத்திற் சிறந்தவர்கள்; அவர்களே தமிழருக்கு நாகரிகத்தைக் கற்பித்தவர்கள் எனக் கூறும் குறிக்கோள் இருப்பதை நாம் காணலாம்.[2] ஆரிய வேதங்கள் என்னும் இச்சிறிய நூல், மேற்புல அறிஞர் பலர் வெளியிட்டுள்ள சிறந்த கருத்துக்களைத் துணைக்கொண்டு எழுதப்பட்டதாகும். சிறுகுழந்தையும் ஒவ்வொன்றுக்கும் நியாயம் கேட்டு ஆராய்கின்ற காலம் இது; ஆகவே பொய்க்கதைகளை அடிப்படையாகக் கொண்ட நம்பிக்கைகள், இனி நெருப்பின் முன்வைத்த வெண்ணெய் போலாகி விடுமென்பதில் சந்தேகமில்லை.

பிராமண ஆசிரியர்கள், இந்தியமக்கள் ஆராய்ச்சித்துறையில் இருப்பது எப்படி இருக்கிறதென்றால், தமிழருடைய உண்மை வரலாறு வெளியில் வராதபடி, அவைகளை வடிகட்டி மறித்து ஆரியர் வரலாறுகளையே வெளியில் விடுவதற்கு இருப்பதுபோல வென்க.

சென்னை, 1—1—47. — ந. சி. கந்தையா

[2] History and philosophy of the Lingayat Religion—P.10—M. R. Sakhare M. A. T. D.

# ஆரிய வேதங்கள்

நாம தமிழா; தமிழராகிய நாம ஆரிய வேதஙகளைப பற்றியறிய வேண்டிய முககியம யாது? எனப பலா வினவலாம. நம்மவர் பலா ஆரிய வேதஙகளைபபற்றி அறியார்; அவை கடவுளாற செயயபபட்டவை என நமபி வருகின்றனா. இனறு ஆலயஙகளில் சொல்லபபடுவன கடவுள வாககாகிய வேதஙகள என நமபபபடுகினறமையினாலேயே, வடமொழி சமய மொழியாகவும தமிழ நாட்டில் இடமபெற்றுள்ளது. இது நமமவா அறியாமையின விளைவாகும.

சில ஆண்டுகளினமுன திரு. கா. சுபபிரமணிய பிளளை எம. ஏ. எம. எல். (M. A. M. L) அவர்கள, திருநானமறை விளக்கம என்னும கட்டுரைவாயிலாக ஆரிய வேதஙகள காலநதோறும மக்கள பாடிய பாடல்களின தொகுதிகள் என எடுத்து விளக்குவாராயினா. அபபொழுது நமமவருள ஒருவரே, வேதஙகள கடவுளாற் செயயப்பட்டவை எனக் கூறி முந்நூறு பக்கங்களுக்கு மேல் விரிந்த ஒரு புத்தகத்தை வெளியிடுவாராயினர். அதறகுப் பார்ப்பன வகுப்பினரில் ஒருவர் மதிபபுரையும வழங்கியிருந்தார். வேதஙகள கடவுளாற் செய்யப்பட்டன என்று நாட்டுவதறகு அவ் வேதபாடல்களுள ஒன்றேனும அந்நூலில் எடுத்து ஆளப்படாதிருந்தமை இஙகுக் குறிப்பிடத் தக்கது. இலங்கையில் வாழ்பவ

ரும் பி. எஸ். ஸி. என்னும் பட்டதாரியும், தமிழ்ப் பண்டிதருமாயுள்ள ஒருவரும், வேதங்கள் கடவுளாற் சொல்லப்பட்டனவே என்று சில திங்கள் வெளியீடுகளில் எழுதுவாராயினர். வட இலங்கையில் வாழ்பவரும் பி. ஏ. பட்டதாரியும் தர்க்கநூல் வல்லாருமாகிய இன்னொருவர், வேதங்கள் கடவுளாற் செய்யப்பட்டன என்று முழங்கினதளவில் நின்றுவிடாது, யாகத்தில் வெட்டப்பட்ட விலங்குகள் உயிர்பெற்றெழுந்தன என்று கூறிக் கந்தபுராணத்தினின்றும் ஒரு பிரமாணமும் எடுத்துக் காட்டியுள்ளார். ஆங்கிலமுந் தமிழும் ஒருங்கு பயின்ற பட்டதாரிகளே இவ்வாறு கூறுவார்களாயின், பொது மக்களின் நிலைமை என்னாகும். வேதம் கடவுளாற் செய்யப்பட்டது எனக் கூறுதல் நம்மவர் பலருக்குப் பழக்கமாக அமைந்துளது. இப்பழக்கத்தை மாற்றுவது கடினமாயிருக்கின்றது. "பழக்கங் கொடிதுகாண்" என்றார் ஒழிவிலொடுக்க நூலுடையாரும்.

ஆரிய வேதங்களிலுள்ள பாடல்களைச் செய்த புலவர்களின் (இருடிகள்) பெயர்கள் எல்லாம் காணப்படுகின்றன. புலவர்கள் பாடிய பாடல்கள், பாட்டினடை, பாடலில் துதிக்கப்பட்ட தெய்வம் முதலிய விவரங்கள் அடங்கிய நூல் வடமொழியில் உண்டு. அதற்கு அனுக்கிரமணி என்று பெயர்.* ஆரிய வேதங்கள் ஒரு கூட்டத்தினருக்கு மாத்திரமே தெரிந்திருந்தன. மற்றவர்கள் அவைகளைப்பற்றி அறிந்திருக்கவில்லை. மற்றவர்கள் அவைகளை ஓதவோ, கேட்கவோ கூடாது என அவர்கள் சட்டம் செய்திருந்தார்கள். அதற்குக் காரணம்

*Of the writings called Anukramani in which the metre, the deity and the author of each song are given in their proper order—The History of Indian literature—P. 61—A. WEBER

அவை கடவுளாற் செய்யப்பட்டிருத்தலும், அவை தேவர்கள் வழங்கும் தெய்வமொழியில் உள்ளனவாத லும் என அக் கூட்டத்தினர் கூறுவாராயினர். அக்பர் காலத்திற்கூடப் பிராமணர் ஓதிவரும் வேதம் எவ்வகையினது என்று அறிய அவ்வரசன் முயன்று வந்தானென்றும், அவனுக்கு அது கைகூடவில்லை என் றும் அறிகின்றோம்.

மேல்நாட்டவர் இந்தியநாட்டுக்கு வரத் தொடங்கி னார்கள். இந்தியநாட்டின் பல பகுதிகள் ஆங்கிலர் ஆட்சிக்கு உட்பட்டன. அப்பொழுது வழக்குகளை விளங்கித் தீர்ப்பளிப்பதற்கு இந்தியநாட்டில் வழங்கும் சட்டங்களையும் தேசவழக்குகளையும் அறியும் கட்டாயம் ஆங்கில நீதிபதிகளுக்கு ஏற்பட்டது. 1773-ல் வாரன் ஹேஸ்டிங்ஸ் என்பவர், வங்காளத்துக்குக் கவர்னர் ஜெனரல் ஆக்கப்பட்டார். இந்தியாவிலுள்ள மற்றைய ஆங்கிலர் இராச்சியங்களுக்கும் அவரே தலைவராயிருந் தார். அவர், நியாயப்பிரமாணங்கள் எல்லாவற்றையும் அறிந்த பிராமணரை அழைத்துச் சட்டநூல் செய்யும் படி பணித்தார். அவர்கள் 'விவதனவசேது' என்னும் சட்டநூல் செய்தார்கள். அதில் குடும்பச் சட்டங்களும், சொத்துரிமைபற்றிய காரியங்களும், இவைபோன்றவை யும் அடங்கியுள்ளன. அதனை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கக் கூடியவர்கள் ஒருவரும் இன்மையால், அது பாரசீகத்துக்குத் திருப்பப்பட்டுப் பின், பாரசீகத்தி லிருந்து ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. அது ("A code of Gentoo") மேன்மக்களின் சட்டம் எனனும் பெயருடன் 1785-ல் அச்சிடப்பட்டது. இதுவே "இந்து லா" (Hindu Law) எனப் படுகின்றது. 1830-வரையில் வேதங்களைப்பற்றி மேல்நாட்டவர்கள் அறியவில்லை. வேதங்களின் ஒரு பகுதி 1838-ல் இலண்டனில் வெளி

வந்தது. 1849க்கும 1875க்கும இடையில் மாக்ஸமூலர் இருக்குவேத பாடல்களைச் சாயணர் உரையோடு அச்சிற் பதித்தார். 1851க்கும 1863க்கு மிடையில் இருக்குவேதமூலம முழுமையும அச்சிடப்பட்டது. வேதமொழி சேர்மனமொழிக்கு (German language) இனமாயிருந்தமையின், மொழிஆராய்ச்சியின்பொருட்டு மேல்நாட்டவர்கள சமக்கிருதத்தைப் பயினறுராகள. இலாத்தின, சேர்மன், பிரெஞ்சு, ஆஙகிலம முதலிய மொழிகளில் வேதஙகள பலரால் மொழிபெயாத்து அச்சிடப்பட்டன. இந்திய நாட்டிலுளள பிராமணாிலும பார்க்க மேல்நாட்டவர்களே வேதஙகளைபபறறி நனகு அறிவார்கள. இனறு சரித்திர ஆராயச்சித துறையில் வேலைசெயயும பிராமண வகுபபினரும, பிராமண வகுபபினரல்லாதாரும வேதஙகளின ஆஙகிலமொழி பெயர்ப்புக்களையே எடுத்து ஆளுகின்றனா. மேல்நாடடு நனமக்களின் குனருத உழைப்புக், காரணமாக ஆரியவேதஙகளும அவைகளைபபற்றிய உண்மைகளும முறறுக வெளிவந்துளளன. அவைகளைப பிராமணரல்லாதாரும, இன்று நன்கு கற்றறியலாம. ஆகவே இன்று அவை மறைக்கப்பட்

ஆரியவேதங்களைப படித்துப பார்ததால், அவை சாதாரண மக்களால் பாடபபட்டவை எனறு எளிதிற புலப்படுதலுமல்லாமல், அவை அறிவுடைய மக்களின் சமயநூலாக இருக்கத்தகாதன என்றும தெளளிதிற் புலப்படும். தமிழ மக்களுககும ஆரியவேதஙகளுககும யாதும் உறவு இல்லை. ஆரியரை எதிர்த்துப போராடியவர்களும், தாசுக்கள என்று அவர்களால் இழித்துக் கூறப்பட்டவர்களுமாகிய தமிழர், அழிந்துபோக வேண்டுமென்று திட்டிப்பாடிய பாடல்கள பல வேதங்களில் காணப்படுகின்றன. இவ்வுண்மைகளை எல்லா

மக்களை நன்கு அறிந்து உண்மை கடைப்பிடிக்குமாறே இந்நூல் வெளிவருகின்றது.

## ஆரியர்

வேதங்களைப்பற்றி அறிந்துகொள்வதன்முன் நாம் ஆரியர் யார்? என்று அறிந்துகொள்ளுதல் வேண்டும். இரசியா நாட்டின் தென்கோடியில் ஒருவகை வெண்ணிற மக்கள் வாழ்ந்துகொண்டிருந்தார்கள்.* அவர்கள் எப்பெயரால் அறியப்பட்டார்கள் என்று ஒருவராலும் அறிய முடியவில்லை. அம்மக்கள் பாரசீகம், இந்தியா, ஐரோப்பாவின் பல பகுதிகளில் சென்று வாழ்ந்து, பற்பல பெயர்களைப் பெற்றனர். பெயர் அறியப்படாத அம்மக்களின் ஒரு கூட்டத்தினர் 'ஆரிய' என [2]பாரசீக, ஆரிய வேதங்களிற் கூறப்பட்டுள்ளார்கள். இக்கூட்டத்தினருக்கு வழங்கிய 'ஆரிய' என்னும் பெயரே அவர் இனத்தவர்களாகிய எல்லாக் கூட்டத்தினருக்கும் பெயராக வழங்குவதாயிற்று. இந்தியா, பாரசீகம் ஐரோப்பாவின் பலபகுதிகளிற் சென்று வாழ்ந்த ஆரிய மக்களின் மொழிகளிலுள்ள பல சொற்கள், ஒரே வகையாக விருக்கின்றன. ஒரே வகையான அச்சொற்கள் பழைய ஆரியச்சொற்கள் எனத் துணியப்படுகின்றன. அவ்வகை ஆரியச்சொற்களைக்கொண்டு பழையஆரியர் வாழ்ந்த இடம், அவர்களின் நாகரிகம், அவர்கள் அறிந்திருந்த தொழில்கள், அவர் நாட்டிற் காணப்பட்ட பறவை, விலங்குகள், மரஞ்செடிகள், போன்றவை அறி

*The original common name of the so called Aryan race is still unknown. One thing is certain that they were not called Aryans. For many other Aryan tribes had other names —Archaens, Celts, Italics, Tocharians, Phrygians etc.—The cradle of the Aryans—H. Heras—New Review VOL 5 P. 353

யப்படுகின்றன. அவ்வகை ஆராய்ச்சியினால் பழைய ஆரியர் இரசியநாட்டின் தென்கோடியில் வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பது உறுதிப்படுகின்றது.

## கலப்பற்ற ஆரியர் உளரா ?

ஆரியர் என்னும் மக்கள், சென்ற சென்ற இடங்களில் வாழ்ந்த மக்களோடு தாராளமாகக் கலந்துகொண்டார்கள். இன்று இவ்வுலகத்திலேயே கலப்பற்ற ஆரியர் இலராவர். இந்தியநாட்டிலே, காசுமீரத்தில் அதிகக் கலப்பற்ற ஆரியர் வாழுகின்றார்கள், என்று கருதப்படுகின்றது. இன்று மக்கள், தம்மை ஆரியர் எனக் கூறிக்கொள்வது நகைப்புக் கிடமானது. அதிலும் தென்னிந்திய பிராமணர், அவ்வாறு தம்மை அபிமானித்து வருவதுதான் வியப்புக்களுள் மிக வியப்புடையதாகும்.*

## வேதபாடல்களின் தொடக்கம்

இரசிய நாட்டினின்றும் வந்து, இந்தியநாட்டிற் குடியேறிய மக்கள் வழிபட்ட கடவுளர், தமிழர் வழிபட்ட கடவுளரிலும் வேறானோர். அலைந்து திரியும் மக்களாக இருந்தமையின், அவர்கள் கோயில்களை அமைத்துக் கடவுளரை வழிபடவில்லை. கடவுளரைக் குறித்துப் பலியிடுதலே அவர்களின் சமயமும் சமயச் சடங்குமாயிருந்தது. பலியிடும்போது, தெய்வங்கள், தாம் விரும்பிய இவ்வுலக சுகங்களைக் கொடுக்கும்பொருட்டுச் சிலர்

---

* It is error to suppose that the pure Aryan race exists anywhere. The aryans from very early time were extensively eclectic, and this eclecticism was the secret of their cultural success. They freely mix with other races. This happened in Europe as well as in India—ibid

அவர்கள்மீது பாடல்களைப் பாடினர். அப்பாடல்களின் தொகை வேதம் எனப்பட்டது. ஆரியர் கி. மு. 2000 வரையில் இந்தியநாட்டை அடைந்தார்கள். வேதபாடல்கள் வியாசமுனிவரால் நான்காக வகுக்கப்பட்டன என்று சொல்லப்படுகின்றது. வியாசர் பாரதகாலத்தவர். பாரதம் கி. மு. 13-ம் நூற்றாண்டு வரையில் நிகழ்ந்ததெனப் படுகின்றது. ஆகவே கி. மு. 2000க்கும் கி. மு. 1300க்கும் உட்பட்ட காலங்களிற் செய்யப்பட்ட பாடல்கள், வேதங்களில் அடங்கியுள்ளன என்று விளங்குகின்றது.

## நான்கு வேதங்கள்

ஆதியில் வேதம் ஒன்றாக இருந்தது. அதற்கு இருக்கு என்று பெயர். இருக்கு வேதத்தில் 1028 பதிகங்கள் உண்டு. பதிகங்கள் என்பன பத்துப்பாடல்கள் கொண்டவை. வேதத்தில் உள்ள பதிகத்தில் பத்துக்குக் கூடியும் குறைந்தும் பாடல்கள் காணப்படுகின்றன. விளங்கும் இலகு நோக்கிப் பதிகம் என்னும் சொல் இங்குப் பயன்படுத்தப் படுகின்றது. இவைகளில் பதினொரு பதிகங்கள் வாலகில்லியரால் பாடப்பட்டன வென்றும், அவை பிற்காலத்தன வென்றும் கருதப்படுகின்றன. அவைகளை நீக்கிப் பார்த்தால் இருக்கு வேதத்திலுள்ளவை 1017 பதிகங்களே. 1017 பதிகங்களிலும் 10,600 பாடல்கள் உள்ளன. ஒரு பக்கத்தில் 33 வரிகள் அச்சிட்டால், இருக்குவேத பாடல்கள் முழுமையும் 600 பக்கங்களில் அடங்கும். இது கிரேக்க கவியாகிய ஹோமரின் இல்லியாட் என்னும் நூல் அளவு ஆகும்.

இருக்குவேதம் பத்து மண்டலங்களாகப் பிரிக்கப் பட்டுள்ளது. மண்டலமல்லாமல் அட்டகம் என்னும்

இனெனுரு பிரிப்பும உண்டு. முதல் மண்டலத்திலுள்ள பாடல்கள பல இருடிகளாற் பாடப்பட்டவை. இரண்டு முதல் எட்டுவரையில் உளள பதிகங்கள ஒவவோா இருடி குடுமபத்தினராற பாடபபட்டவை. ஒன்பதாம மண்டலப பாடல்கள், பல இருடிகளாற பாடபபட் டவை அபபாடல்கள முழுமையும சோம இரசத்தைக் கடவுளாகத் துதிக்கின்றன. ஒன்பதாம மண்டலத்துக் கும பத்தாம மண்டலத்துககும இடையில், வாலகில்லி யரின பாடல்களாகிய பதினெரு பதிகஙகள காணப்படு கினறன. பத்தாம மண்டலப பாடல்கள பத்து இருடி களால் செயயப்பட்டவை. இபபாடல்களின நடை, பொருளகளைககொண்டு இவை பிறகாலத்தன என வேத ஆராய்ச்சியாளர் கூறியிருக்கின்றனா.

இருக்குவேதத்தினினறும பல பாடல்களை எடுத் தும, அவைகளோடு பிற பாடல்களைச் சேர்த்தும பின னும இரு வேதஙகள செயயப்பட்டன. அவை யசுர், சாமம எனப்படும. யாகக் கிரியைகளிற படிக்கும பாடல் கள். அடஙகிய தொகுதி யசுா எனபபட்டது. யசுர் வேதத்திற் காணபபடும பாடல்களில் பாதிவரையில் உளளன.

சாமவேதத்தில் 1550 பதிகங்கள வரையில் உள் ளன. இவைகளுட் பெரும்பாலன இருக்குவேதத்தின் ஒன்பதாவது பத்தாவது மண்டலஙகளிலிருந்து எடுக் கப்பட்டவை. சாமவேதம் யாகங்களில் இசையோடு பாடப்படும் பாடல்கள அடஙகிய பகுதி.

பாடல்களுக்கு நாலு அடிகள் உண்டு; சில சமயங் களில் மூன்று அல்லது ஐந்து அடிகளும் காணப்படு கின்றன. ஒவ்வொரு அடிக்கும் எட்டு, பதினென்று

அல்லது பன்னிரண்டு அசைகள் உண்டு. அடிகள் பெரும்பாலும் ஒரே வகையாக வுள்ளன; சில சமயங்களில் நீளமாகவும் காணப்படுகின்றன. இருக்குவேத பாடல்கள் செய்யப்பட்டமொழி, மிகப்பழமையுடையது. அம்மொழியின் வளர்ச்சியாகிய பிற்கால இலக்கிய மொழிக்குப் பாணினி முனிவர் கி.மு. 4-ம் நூற்றாண்டில் இலக்கணஞ் செய்தார்.

அதர்வணவேதம் நாலாவதாக உள்ளது. இதில் பில்லி சூனியம்போன்ற மந்திர வித்தைகள் கூறப்படுகின்றன. இதை வேதங்களுட் சேர்க்கலாமா, விடலாமா என்னும் கருத்து நீண்டகாலம் இருந்து வந்தது. ஆகவே சில இடங்களில் நான்கு வேதங்கள் என்றும் சில இடங்களில் மூன்று வேதங்கள் என்றும் கூறப்பட்டிருத்தலைக் காணலாம். மனுஸ்மிருதி மூன்று வேதங்களைப்பற்றிக் கூறுகின்றது.

## வேதங்களிற் கூறப்படும் கடவுளர்

இருக்கு வேதத்திற் சொல்லப்படும் கடவுளர், இயற்கையின் உருவகங்களாவர். இறந்தவர் வணக்கமே இயற்கை வணக்கமாக மாறியுள்ளதென்பது பல்லோர் கருத்து*. இராமாயணத்தின் சிக்கல்கள் (Riddles in Ramayana) என்னும் நூலில், ஆரியரின் தெய்வங்கள் அவர்களின் இறந்த முன்னோர்கள் என வைத்தியர் என

* The theory is that religion arose from the worship of deceased ancestors. This is usually held to be more convincing than the theory of nature worship, in that it gives a reason why man as a fact came to believe in divine or superhuman beings—Vedic Hymns—P. 15—Edward T. Thomas M. A. D. Litt

னும் அறிஞர் கூறியுள்ளார். வேதபாடல்கள், சோமச் சாறு, நெய், மாமிசம் முதலியவைகளை நெருப்பில் பலி யாக இட்டு யாகஞ் செய்யும்போது படித்தற்குரியன.

வேதங்களிற் கூறப்படும் தேவர்கள், தயஸ், வரு ணன், மித்திரன், ஆதித்தர், சூரியன், சாவித்தர்; பூசன், விஷ்ணு, அஸ்வினிகள், உசாக்கள், இராதி, இந்திரன் உருத்திரன், மருத்துவர், வாயு, அல்லது வாதா, பிரு துவி, அக்கினி, பிரகஸ்பதி, சோமன், சிந்துஆறு, விபாஸ்ஆறு, சுதுட்ரி (Sutlej) ஆறு, சரஸ்வதி (ஆறு) முதலியோராவர். தேவுக்களும் முன்பு இறப்பவர்களா யிருந்தார்கள். சோம இரசத்தைப் பருகி அவர்கள் இறப்பை ஒழித்தார்கள். தெய்வங்கள், வடிவில் மனி தனைப்போன்றனவே. தீக்கடவுளின் நாக்கும் உறுப்புக் களும் நெருப்பின் சுவாலைகள். சிலர் போர்க்கடவுளர். இந்திரன், இவ்வகையினன். கடவுளர், குதிரை அல்லது வேறு விலங்குகள் பூட்டிய தேரில் வானத்தில் சவாரி செய்கிறார்கள். அவர்களுடைய உணவு, பால், நெய், இறைச்சி, தானியம் முதலியன. அவர்களுக்கு அவ் வுணவு பலிகள் மூலம் கிடைக்கின்றன. அக்கினி அவர் களுக்கு அவைகளைக் கொண்டுபோய்ச் சேர்க்கிறான். சில சமயங்களில் அவர்கள் தமது தேர்களில் வந்து பலிகளை ஏற்கின்றனர். அவர்களின் இருப்பிடம் வானத்திலுள்ள சுவர்க்கம். அவர்களுக்கு ஆற்றல் மிக உண்டு. அவர்களை மகிழ்விப்பதால் அவர்கள் மக்க ளுக்கு நேரும் இடையூறுகளைப் போக்குகின்றனர். உலகிலுள்ள எல்லா உயிர்களின்மீதும் அவர்கள் அதி காரம் செலுத்துகின்றனர்.

## வேதம் என்னும் பெயர்

ஆரிய மக்கள் தம் முன்னோர் கடவுளரைத் துதித்துப் பாடிய பாடல்களுக்கு வேதம் எனப் பெயரிட்டார்கள். வேதபாடல்கள் அறிவு வளர்ச்சிக்காகப் பாடப்பட்டனவல்ல, கடவுளின் மறைவான பெயர்களைக் கூறும் மந்திரங்களாகச் செய்யப்பட்டன. மந்திரம் என்பதற்கும் மறைத்துச் சொல்லப்படுவது என்று பொருள். வேதம் என்பதற்கு அடி, 'வித்' எனப்படுகின்றது. அது பொருந்துமாறில்லை. ஆரியமக்கள் வருமுன்னரே இந்தியநாட்டில் வாழ்ந்துகொண்டிருந்த மக்களுக்கு மறை யிருந்தது. மறை இருவகை; கடவுளின் இரகசியமான பெயரைச் சொல்வதாகிய மந்திரம் ஒன்று; மற்றது குரு மாணாக்கர் முறையில் உபதேசிக்கப்படும் உண்மை ஞானங்கள். தமிழர் தமது தத்துவ ஞானங்களையும் சமயக்கருத்துக்களையும் நூலாகச் செய்யும் வழக்கில்லை. இதனை "அங்கிலை மருங்கின் அறமுதலாகிய மும்முதற்பொருட்கும் உரிய என்ப"(தொல்-செ-106) என்னும் தொல்காப்பியச் சூத்திரம் விளக்குகின்றது. இதனால் தமிழரின் சமய சம்பந்தமான கருத்துக்கள் மறை, வேதம் எனப்பட்டன. வேதம் என்பதற்கும் மறை என்னும் பொருளேயாகும். வேதம் என்னும் சொல், மற்றைய ஆரிய மக்களின் மொழிகளிற் காணப்படாமையால், அது தமிழ்ச்சொல் என்பது நன்கு துணியப்படும். வேதம் என்னும் சொல்லுக்கு உண்மையான அடியைக் காணமாட்டாத ஆரியமக்கள், அதற்கு அடி, 'வித்' எனக் கூறலாயினர். தமிழிலிருந்து வேதங்களிற் சென்று ஏறியுள்ள பல தமிழ்ச்சொற்கள் உள்ளன என்பதைக் கல்ட்வேல், கிற்றெல் முதலிய ஆராய்ச்சிவல்லார் காட்டியுள்ளார்கள். "தமிழ்ச்சொற் பிறப்பு ஒப்பியல் அகராதி" என, நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் வெளி

யிட்டு வரும நூலில், தமிழிலிருந்து வடமொழியில சென்று வழங்கும பல தமிழ்ச் சொறகளுக்குத் தபபாக வடமொழி மூலஙகள கூறபபட்டிருத்தல் எடுத்துக் காட்டப்பட்டுளளது. இன்று தமிழில் வழக்கொழிந்த ஆரிய தமிழ்ச்சொறகள பலவறறை மலையாளம், கன்னடம், தெலுஙகு, துளு முதலிய மொழிகள் காப்பாறறி வைத்திருக்கின்றன. அவவாறே ஆரியமொழியும வழக்கிறந்த பல தமிழ்ச்சொற்களைக் காப்பாற்றி வைத்திருககின்றது என நாம துணிதல் கூடும. ஒரே பொருளைக் குறிக்கும் சொறகள, அபபொருளின் வெவ்வேறு இயல்புகளைக குறிக்கும சொல்மூலஙகள் வாயிலாகப பிறந்து வழஙகின. அவற்றுட் சில தமிழில் வழக்கிறந்துபோக, மறறவை சில வடமொழியிற் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, பாய எனனும் அடியாகப் பரி என்னும சொல்லும, அசை எனனும அடியாக அசுவம் என்னும சொல்லும் பிறந்தன. அசுவம் எனனும சொல தமிழில் வழக்கிறந்தது. அது இன்று வடமொழியிற் காணபபடுதலின், அது வடமொழிச் சொல எனறு கருதப்படுகினறது. இவ்வாறே வேதம் என்பது மறை என்னும் பொருளில் வழங்கிய தமிழ்ச்சொல் என்பது திண்ணம். இப் பெயரையே ஆரியர் தமது பாடல்களுக்கு இட்டு வழஙகினர். வேதஙகளில் மறைத்தற்குரியது யாதும் இன்மையால், அப்பெயர் இடுகுறிப் பெயராக அவைகளுக்கு இடப்படலாயிற்று. தமிழர் தமது சமயத்தொடர்பாக வழங்கிய பெயர்களை, ஆரிய மக்களும் ஆண்டமையின் பிற்காலங்களில் பெரும் மயக்கம் உண்டாவதாயிற்று.

# மந்திரங்கள் மறை ஆதல்

வரலாற்று தொடர்பான உண்மை ஒன்றைக் கண்டு பிடிக்கவேணடுமாயின், நாம உலகமக்களின் வரலாற்றை அறியவேணடும.

எணணஙகளே மொழியாக மாறுகின்றனவென்று நாஙகள எலலோரும அறிவோம. எண்ணஙகளுககு ஆற்றல் உணடு. ஒருவன தும்மினுல் அவனைபபற்றி யாரோ நினைக்கிருாகள என்ற நமபிககை, உலகமக்கள எல்லோரிடையும காணப்படுகினறது. "வழுத்தினுள தும்மினைக வழித்தழுதாள—யாருளளித தும்மினீ ரென்று" என்த திருவளளுவனுரும கூறுதல் காணக. ஆபிரிக்காவிற் சில மககள தமது உணமைபபெயரைப பிறருககு வெளியிடுவதில்லை. உண்மைபபெயரை உச்சரிததுப பிறர் தமககுத தீஙகிழைக்க முடியுமென அவர்கள நமபுகினருாகள. ஆகவே அவாகளின உண்மையான பெயர், அவாகளின கிட்டிய உறவினருக்கு மாத்திரம தெரியும. தமக்குத தீஙகு இழைக்கக் கூடிய விலஙகின பெயரை அவர்கள சொல்லார்கள. சொன்னுல் அது வந்து உடனே தமமைக் கொன்றுவிடும என அவர்கள நமபுகின்றுாகள். அவ்வாறு சொன்னமையால் அவவிலஙகு வந்து அவர்களில் சிலரைக் கொன்று விட்டதெனனும பழஙகதைகள அவர்களிடையே உள்ளன. இராக்காலத்தில் 'பாமபு' என்று சொல்லுதல் ஆகாது என, முதியவர்கள குழந்தைகளுக்குக் கூறியதை நாம் கேட்டுளளோம. இறந்தவனின் பெயரைச் சொல்லுதல் ஆகாது என்னும நமபிக்கை சில மக்களிடையே இருநது வருகினறது; பெயரைச் சொன்னுல் இறந்தவரின ஆவி வந்து, தமக்குத் தொந்தரவு கொடுக்குமெனபது அவர்களின நமபிக்கை. இவவாறே தெயவத்தின் உண்மை

யான பெயரைச் சொன்னல் தெய்வம் வந்துவிடும் என்னும் நம்பிக்கை மக்களிடையே இருந்து வந்தது. தெய்வங்களின உண்மையான பெயர் சிலருக்கு மாத்திரம் தெரியும. யேகோவின் பெயரை கடவுளே மோசேய்க்குச் சொன்னர். அபபெயர் மந்திரமாகப் பயன்படடது. அப்பெயரை யாருமே வெளிபபடையாகச் சொல்லுதல் கூடாதென்றும சட்டம இருந்தது. அவ்வாறு சொல்பவருக்குக் கடுந்தண்டனை விதிக்கபபட்டது. எழுதுங்கால் அப்பெயர் வேறு வகையாக எழுதபபட்டது. இன்று மூலமந்திரஙகள எனவழஙகுவன, கடவுளர்களின் பெயாகளே. கடவுளரின் மறைவான பெயர்களும், அப்பெயர்கள அடங்கிய பாடல்களும, மந்திரஙகள அல்லது மறைகள் எனபபட்டன. அவை குரு மாணுக்க முறையில் சொல்லிக் கொடுக்கப்பட்டு வந்தன. மறை, மந்திரம, வேதங்கள எனனும பெயர்கள தோன்றுதறகுக் காரணம இங்கு விளக்கப்பட்டுளளது.

இதற்கு அடுத்தபடியில் இன்னபாடலுக்கு இன்ன ஆற்றல் உண்டு என்பதுபோனற கருத்துக்கள உண்டாயிருந்தன. ஒருவன யாது நிகழவேண்டுமென விரும்பாமலே அவ்வகைபபாட்டல் ஒன்றைச் சொன்னல், அது அப்பாடலுக்குரிய பயனைத் தப்பாமற் பயந்துவிடுமென்னும் கருத்து உண்டாயிருந்தது. "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிடந்த-மறைமொழி தானே மந்திர மென்ப" (தொல்-செய-178) என்பது தொல்காப்பியம - "சொல்லிய சொல்லின் பொருண்மை யாண்டும் பயக்கச்சொல்லும ஆற்றல் உடையாராவர், ஆணையாற் கிளக்கப்பட்டுப் புறத்தார்க்குப் புலனகாமற் சொல்லும் சொற்றொடர்கள் எல்லாம் மந்திரம் என்ப" என அதற்குப் பேராசிரியர் உரை கூறியுள்ளார். இவ்வகைக் கருத்தே உலகின் மற்றைய இடங்களிலும் இருந்து வந்தது.

நச்சுச்சொல், மங்கலச்சொல், அமுத எழுத்து, நச்செழுத்து, அறம்பாடுதல போன்றவை முற்கால மந்திரங்களைப்பற்றிய கருததுக்களின் நிழல்களேயாகும்.

தெய்வஙகளை அழைப்பதற்காகச் சொல்லபபட்ட பாடல்கள, மந்திரஙகளாகக் கருதப்பட்டன. அப பாடல்கள தெயவஙகளைத் துதிக்கும நோக்கமாகப் பாடபபட்டன வல்ல. அவைகளை வருமபடி கட்டாயப படுத்துமபொருட்டே பாடப்பட்டன. இன்று வழங்கும தோததிரஙகள தெயவஙகளை அழைக்கும மந்திரஙகளைப் பினபறறிச் செயயபபட்டவையாகும.

இக் கருத்துப்பறறியே ஆரிய வேதஙகளிற காணப படும பாடல்கள 'மந்திரம' எனனும பெயரைப் பெறலாயின.

## வேதங்கள் கடவுளாற் சொல்லப்பட்டன என்ற மயக்கம்

ஆரியரின சமயம, யாகமசெய்வது ஒனறினையே குறிக்கோளாகக் கொண்டது. ஊன, தானியம, நெய, சோமச்சாறுமுதலிய உணவுகளை யாகஙகளவாயிலாகத் தேவர்களுக்குக் கொடுபபதால, இமமையில் தாம விரும பியவற்றைப பெறுவார்கள் எனறும, மறுமையில் செம்மையுறறிருப்பார்கள எனறும் அவர்கள நமபினர்கள. இந்நமபிக்கையினால் அரசரும செல்வரும யாகங்களைச் செய்தனர். பிராமணர் புரோகிதராக விருந்து யாகங்களை நடத்தி வைத்தனர். அதறகாக அவர்கள் மிக்க பொருளைத் தக்கணையாகப் பெற்றனர். தமக்கு மெய்வருத்தமின்றி எத்தொழிலினால் மதிப்பும செல்வமும் கிடைக்கின்றனவோ, அத்தொழிலை நிலைப்படுத்தும் பொருட்டு அவர்கள தாம பயின்றுள்ள மந்திரங்கள்

கடவுளாற் சொல்லப்பட்டன வென்றும, அமமந்திரங்கள செய்யப்பட்டுளள மொழி கடவுள் மொழி என்றும, அம்மொழியில் சொல்லப்படாதவைகளைக் கடவுளர் அறிந்துகொள்ளமாட்டார் எனறும கூறி அரசர, பெருமக்கள, பொதுமக்கள் எல்லோரையும் நம்புமபடி செயதனர். முறகால மக்கள பொயகளிலிருந்து மெய்யைப்பிரித்து அறியும ஆற்றல் இல்லாமல் இருந்தார்கள; அது பறறியே ஒருபோதும நிகழமுடியாத புராணக் கதைகளை மெய்யென நமபி வந்தார்கள. இராமர பதினோராயிரம் ஆண்டு அரசுபுரிநதார. தசரதன அறுபதினாயிரம ஆண்டு உயிர் வாழ்ந்தார எனனும கதைகளை மக்கள நமபி வந்திருக்கிறாரகள. மெகஸதீனஸ, ஹெரதோதஸ் (Heradotus) போனற ஆசிரியர்களும நமபத்தகாதவற்றை உணமையென நமபினாரகள. இந்தியர் வில் சிலருக்குக் காது நீளமாக இருககிறது. அவர்கள காதைப பாயாக விரிததுக்கொண்டு அதன் மீது படுத்து நித்திரை கொள்ளுகிறார்கள. சிலர் மூக்கினால் உணவு கொளளுகிறாரகள எனபனபோன்ற கதைகளை மெகஸ்தீனஸ் எழுதியுளளார. வரலாறறாசிரியர்கள, முற்கால மக்களின் மனபபானமை இவவாறிருந்ததென்றும், ஆகவே பழஙகதைகளில் உளள உண்மைகளைப் பொய்களிலிருந்து பிரித்தறிதல வேண்டுமெனறும, அது மிக வில்லங்கமான செயலென்றும கூறியுளளார்கள.*

* Historians especially in writing of early ages, have copied down the traditions of real events so mixed up with miths that it is one of the hardest tasks of the student to judge what to believe and what to reject-Anthropology. E.B. Tylor.

## தேவார திருவாசகங்கள் சொல்வதால் வேதங்கள் கடவுள் வாக்காகுமா ?

தேவார திருவாசகம், திருவாயமொழி முதலியவை களிலும பிற தமிழநூல்களிலும, வேதஙகள கடவுளா லருளப்பட்டன என்று கூறபபடுதலின, அவை கடவு ளாற சொல்லபபட்டனவாகு மெனப பலா வழக்கிடு கின்றனர்.

சமயக் குரவாகளும பிறரும சரித்திர ஆராயச்சியில் சென்றவாகளல்லா. வேளவிபுரியும பிராமணர் தமக்கு மதிப்பை யுண்டாககி, அதனால மிக்க பொருளைத் தான மாகபபெற நினைந்து சூழந்து கட்டிய கட்டுககதைகள மக்களால் நமபபபடலாயின. இவை மாத்திரமல்ல, புரா ணஙகளிற காணபபடுவன போன்ற பல கறபனைக கதை களும மக்களால் மெயபோல நமபபபட்டு வநதன. கடவு ளின பெருமையைப பாடியவாகள, கடவுளின பெரு மையை விளக்கும பொருட்டு வழஙகிய கறபனைக கதை கள பலவறறையுமே எடுதது ஆணடுளளாாகள. இதனை ஒப்பவே, அவாகள வேதஙகள கடவுள வாக் கென ஒரோரிடததுக கூறியமை வியபபன்று. சிவன தககணா மூர்த்தி வடிவில் இருநது சனகாதி நால்வாககு நான் மறையின் உட்பொருளை ஓதினா் எனத்தமிழநூல கள கூறுகின்றன. வடமொழி வேதஙகள, பறபல முனி வர்களால் பறபல காலஙகளில் பல சிறு தெயவஙகளைத் துதித்துப பாடிய பாடல்களாகக காணப படுகின்றன. வேதஙகள கடவுளாற செயயபபட்டன என்று நாட்ட முயன்று வருவோா, அவவேத பாடலகளைக்கொண்டே அதனைநாட்டுதல்வேண்டும. ஒருவன் முயலுக்கு மூன்று கால்கள் எனக கூறினால், அவனுககு ஒரு முயலை நேரில் காண்பித்து அதற்கு நான்கு கால்கள என மெய்பபிப்

பதே தகுந்த முறை. சாத்தன் முயலுக்கு மூன்றுகால் என்றான்; ஆதலால் முயல்களுக்கெல்லாம கால்கள் மூன்றே எனச் சாதிப்பாரு முண்டோ?

ஒவ்வொரு சமயத்தவர்களும, தத்தம சமய நூல்கள கடவுள் சமபந்தமாக வெளிவந்தன வெனவே கூறுகின் றனர். சமய நூல்கள மாத்திரமல்ல; மொழிகளும அம் மொழிகளுக்குரிய எழுத்துக்களும் கடவுளால அருளிச் செயயப்பட்டன எனறு நமபபபட்டு வந்தன.

தமிழ நாட்டில் இருக்கு முதலிய வேதங்களல்லாத பிறவேதஙகள, செவிவழக்கில் இருந்தனவெனபது பின வருபவைகளால் அறியக் கிடக்கினறது.

"நான்கு கூறுய மறைந்த பொருளுடைமையான நான்மறை யெனறுா; அவை தைத்திரியமும், பௌடிக மும், தலவாகாரமும், சாமவேதமுமாம். இனி இருக்கும, எசுவும், சாமமும, அதர்வணமும எனபாருமுளா. அது பொருந்தாது"*

—நச்சினார்க்கினியர்

"இருக்கு முதல் வேதம பௌடிகம் எனப்படும்"
"இரண்டாம வேதம தைத்திரிய மென்ப"
"மூன்றுவது சாமம் கீதநடை சாரும்"
"நான்காம் வேதம் அதர்வண மென்ப",

—திவாகரம்

"சாந்தோகா பௌழியா தைத்தியா சாமவேதியனே" (நாலாயிரப பிரபந்தம பெரிய திருமொழி). மொகஞ்சத ரோப்புதை பொருள ஆராயச்சியினால் ஆரியருக்கு முற பட்ட தமிழர்களுக்கிடையில் ஆலமரத்தைச் சிவன் கட வுளின் புனித மரமாகக் கொள்ளும் சமயக் கொள்கை

யுள்ளதெனத் தெரிகின்றது. ஆரியருக்கு முற்பட்ட காலந்தொட்டு வரும சில சமயக் கருத்துக்களையே தமிழர் இறைவன் கல்லாலின் கீழ இருந்து அருளிச்செய்த நான மறை என நம்பி வந்தார்கள ஆகலாம. தமிழா முறையைப பின்பற்றியே ஆரியர் தமது வேதஙகளையும நான்காககினர் எனக் கூறுதல் பிழையாகாது. ஆரியருக்கு வேதஙகளை நான்காக வகுத்துக கொடுத்து அவைகளுக்குப பெயரிட்டவர் பரதர் (தமிழ) வகுப்பின ராகிய வியாசரே யாவர். மனு, திராவிட அரசன எனப புராணஙகள கூறுகின்றன. கி. பி. முதல் நூற்றாண்டு வரையில், பிராமணர் ஒரு சட்ட நூலைச் செய்து அதற்கு மனுதரும சாத்திரம எனப பெயரிட்டனர். இவ்வாறு பொயப பெயர்கள் புனைந்து நூல்களைக் கட்டினமையி னாலேயே, தமிழ நாட்டில் பெருமயக்கம நேர்ந்தது.

## தமிழருக்கு ஆரிய வேதங்கள் முதல் நூல்களாகுமா?

இன்று, கிறித்தவர்கள, மகமதியர் அல்லாத சிறுவாகளுக்குப் பள்ளிககூடஙகளில் சைவ, வைணவர்களுக்குச் சமய முதல் நூல்கள நான்கு வேதங்கள என்றும, அவை இருககு, யசுர், சாமம, அதாவணம என்னும நான்கு வேதங்களென்றும், ஆசிரியர்கள சொல்லிக் கொடுக்கின்றனர். இருசாராரும அவைகளைப பெயரளவி லறிவார்களே யன்றி நூலளவில் அறியார்கள். ஆறுமுக நாவலரும் தமது சைவ வினாவிடையில், சைவ சமயத்தவர்களுக்கு முதல் நூல்கள் இருக்கு, யசுர், சாமம, அதர்வணம என்னும் நான்கு வேதஙகள் என்று கூறியுள்ளார்.

"வேதம் நித்தியனாகிய பரமசிவனால் கூறப்பட்ட மையினாலும், இறுதிக்காலத்துப் பரமசிவத்தி லொடுங் கிப் படைப்புக்காலத்திற் றோன்றுமாதலானும நித்திய மென உபசரித்துக் கூறப்பட்டது"

—சிவஞானபாடியம்

தமிழர்,ஆரியமக்களை மிலேச்சர் எனவே வழங்கினர். அவர்கள, ஆரியரையும அவர்கள நூல்களையும ஏற்றுக் கொளளவில்லை. திவாகரத்தில் ஆரியருக்குப் பெயராக மிலேச்சர் என்னும சொல் காணப படுகின்றது. சமயக் குரவர் காலஙகளில் ஆரியர் தமிழா போராட்டங்கள நடந்துகொண்டிருந்தன. இவ்விரண்டு மக்களையும சந்து செயயும பொருட்டே, சமயகுரவர்

"ஆரியன் கண்டாய் தமிழன் கண்டாய்"
"செந்தமிழோடு ஆரியனைச் சீரியானை"
"  ]யந் தமிழோடிசை யானவன்,'

எனபன போனற வாக்கியஙகளைக் கூறுவராயினர். "ஆரியப புத்தகப் பேய்கொண்டு புலமபிற்று" என நக்கீரா கோப் பிரசாதத்தில் கூறியிருததலும காண்க. இவை போனற பலகாரணஙகளால் தெனனாடடவா, நானமறை எனக்கொண்டவை வடமொழி வேதஙக ளல்ல எனவும கருதபபடுகினறன. பெயரொறறுமை களால் யாதும் துணிய முடியாது. பழைய பெயர்களுடன் புதிதாக வோ பேர்அறியாதவாகளால் எழுதபபட்ட நூல் கள் பல வெளி வந்துளளன. பேரிசைச சூத்தி ரம, பரத சேனாபதீயம போன்றனசில எடுத்துக் காட்டுக் களாகும்.

"மறைகள் ஈசன் சொல்" —அருணந்தி சிவம்
"சாத்திரமாவது வேதமன்றோ வதுதான் சுயம்பு" —நீலகேசி

வேதங்கள் கடவுளாற் செய்யப்பட்டன என்று நமபி வந்தமையினால் அவர்கள் அவ்வாறு கூறுவாராயினர். வேதங்களை அவர்கள் பார்த்திருப்பின் அவ்வாறு ஒரு போதும் கூற உடன்பட்டிருக்கமாட்டார்கள். வேதங்கள் சைவ வைணவ சமயங்களுக்கு மாறுனவை. சைவ வைணவ சமயங்கள் ஆகமங்களைப பிரமாணமாகக் கொள்ளுகின்றன. வேதங்களுக்கும ஆகமங்களுக்கும உள்ள வேற்றுமை வடக்குக்கும தெற்குக்கும உள்ளது போன்றது என்று ஆராய்ச்சியாளர் நன்கு ஆராய்ந்து கூறியுள்ளார்கள்.*

## வேதபாடல்கள் சில

வேதபாடல்கள் சிலவற்றின் மொழிபெயர்ப்பை இங்குத் தருகின்றோம். அவைகளை நோக்கினால் தமிழர் சமயத்துக்கும வேதங்களுக்கும யாதும தொடர்பில்லை யென்று நன்கு விளங்கும.

(1) சோம இச்ரமே! இந்திரன் அருந்துதற் பொருட்டுப பிழிந்தெடுக்கப்பட்ட நீ, மிக இன்சுவையோடு கூடியதும, மிகக் களிப்பைக் கொடுப்பது மாகிய துளிகளாய் ஒழுகி நிறைவாயாக.

—சாமவேதம் பவமானகாண்டம்

---

* When the subject matter and the contents of the ıgamas and the Vedas are closely exmined and studied ıt 'ill be found that the Agamas and the Vedas stand altogether ıpart as poles as under—Philosophy of the Lingayats P. 279 ıkari M. A.

(2) இந்திரனே! சோம இரசம் பிழிந்த எனது நண்பர்களாகிய அம்மனிதர்கள் மிகபபற்றுடையவர்களாய்ப் பசுவைப்போல உன்னையே சிறபபாகப் பார்க்கிறார்கள்.

(3) இந்திரன கத்துருவ இருடியாற் பிழியப்பட்ட சோம இரசத்தைப பருகினன; பருகிய பினனா கத்திரவாகு என்னும அரசனைக் கொனறான். அதனால் இந்திரனுடைய வீரத்தனமை புலப்பட்டது.

—சாமவேதம்—ஐந்திரகாண்டம்

(4) சோம இரசமே! மிகுந்த இனசுவையோடு கூடிய நீ, ஆராதிக்கின்ற வேளவியாகிய இடத்தைப் பற்றி விளங்குவதாய, மருத்துக்களோடு கூடியஇந்திரன் பொருட்டுக் கலசத்தில் நிறைவாயாக. —ஷை

வேதபாடல்கள என்பன இவவாறே இந்திரன், வருணன, சோமன், மருத்துவர் போன்ற பல தெய்வங்களைத் துதிக்கின்றன. இவவகைப் பாடல்களைக் கடவுள செய்தார் எனக் கூறுதல் கடவுளை இழித்து உரைப்பதாக முடியுமன்றோ?

## வேதபாடல்கள் எவ்வாறு பயன்படத்தக்கன

எகிப்திலே பல பழைய சமாதிகளும் கட்டிடங்களும் அழிந்து கிடக்கின்றன. மொகஞ்சதரோ அரப்பா என்னும் இடங்களில் பண்டைக் காலத்தியப் பழம்பொருள்கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவைகளைக் கொண்டு அக்கால மக்களின் வாழ்க்கை, நாகரிகம் ஆகியன அறியப்படுகின்றன. அவைகளை ஒப்ப, வேதங்களும் பழைய் பொருள் ஆராய்ச்சிக்குப் பயன்படுமே யன்றிச் சமய நூலாகக் கொள்வதற்குச் சிறிதும் பயன்படாவென்க. அவைகளைச் சமய நூலாகக் கொள்வது எவ்வாறிருக்கு

மெனில், இன்று உருக்கினால் செய்து பயன்படுத்தப் படும் செவ்விய கூரிய ஆயுதங்களைக் கைவிட்டுப், பிடி இருக்காதனவும், கரடுமுரடான கற்களாற் செய்யப்பட்டனவுமாகிய பழைய கற்கால மக்கள் பயன்படுத்திய ஆயுதங்களைப் பயன்படுத்த முயன்றது போலவும், இன்று வழங்கும் சில்லுள்ள வண்டிகளையும், நீராவி, மின்சாரங்களால் இயக்கப்படும் வண்டிகளையும் கைவிட்டுச், சில்லில்லாத சறுக்கி வண்டிகளைப் பயன் படுத்த எண்ணியது போலவும் ஆகும்.

இவ்வுண்மையை அறிந்துகொள்ளமாட்டாத ஒரு சிலர், வேதங்களே தமக்கு முதல் நூலெனக் கொள்வதாலும், தாம் அவ் வேத பாடல்களைச் செய்தவரின் மரபிலுள்ளவர்கள் எனக்கூறிக் கொள்வதாலும் தமக்கு உயர்வுண்டாகின்றது எனக் கருதிவருகின்றனர். இவ்வாறு கொள்ளும் ஒரு கூட்டத்தினருக்குப் பெருமை கொடுத்து அவர்களே சமயத்தைத் தாங்கி வருகிறார்கள் என நம்பிவரும் நம்மவர் செயல் மிக வியப்பு உடையதே! வேதங்களில் கூறப்படும் பொருள்கள் எவை என்பதை இனிச் சிறிது ஆராய்வோம்.

## யாகங்கள்

யாகம் என்பது தெய்வங்களுக்கு உணவுகொடுத்தல். உணவு நெருப்பில் இடப்பட்டது. நெருப்பு அக்கினி என்னும் தெய்வமாகக் கொள்ளப்பட்டது. அது தன்னிடத்தில் இடப்பட்ட உணவுகளை ஏற்றுத், தேவர்களிடம் சேர்ப்பிக்கிறது என ஆரியமக்கள் நம்பிவந்தார்கள். அக்கினியைத் துதித்துப் பாடப்பட்ட பல பாடல்கள், வேதங்களில் காணப்படுகின்றன. யாகத்தில் மந்திரங்களை ஓதித் தேவதையை அழைப்பவர் ஹோதா

என்றும, பாட்டுக்களைப பாடிக்கொண்டு சோமரசத் தைப பலிசெலுத்துகின்றவா உத்காதா என்றும், யாகககிரியைகளைச செயபவா அத்வார்யு என்றும, பெயா, பெறுவர். தலைமைப புரோகிதராகிய பிரமா, யாகத்துக்கு இடையூறு நேராமல் தெனதிசையில் இருந்து காவல் செயவார். தெறகுததிசை இயமனின் திசையாதலின, அங்கு நின்றும துட்டதேவதைகள தோனறி மககளுககுப பயம உண்டாக்கும எனபது அவர்களின நமபிக்கை. யாகஙகளிற பலவகை உண்டு. சோமயாகம், நரமேதம (நரபலி) குதிரையாகம, பசு யாகம், ஆட்டுககடா யாகம எனபன அவறறுட் சில. தக்கனுடைய வேளவியில் ஆடடுக்கடாககள வெட்டப் படடன என்று புராணஙகள கூறும. "தக்கன வேள வித் தகா தினறு" எனத் திருவாசகத்தில் வருதல் காண்க. யாகஙகள வாயிலாகத் தேவாகளுக்கு அவர் களவிரும்பும் உணவுகளையும, மதுவகைகளையும கொடுத் தால், அவர்கள அவ்வாறு செயகின்றவாகளுக்குச் செல்வஙகளையும், பிற இமமைபபயனகளையும கொடுப் பார்கள என அக்கால ஆரிய மககள் நமபியிருந்தார்கள். யாகஞ்செய்வதே அக்காலமதத்தின் முடிவான கொள் கை. இதறகுமேல் மனிதன இமமையில் சமய சம்பந்த மாகச் செய்யக்கூடியது எதுவும் இருக்கவில்லை. யாகங் களில் களளும ஊனும புசிக்கப்பட்டன. இதனைக் கைவல்லிய நவநீதமுடையாரும் "களளூமூனும் விருமபி னால், நீ மகஙகள்செய" என வேதஙகள விதித்திருக்கின றன எனக் கூறியுளளார்.

## சோமயாகம்

சோமம் என்பது ஒருவகைக்கொடி. அது இந்தியா விலும பாரசீகத்திலும் பெரும்பாலும் மலைகளில் படர்

வது. சோமக்கொடிகளை இரு கற்களினிடையே வைத்து நசுக்கிப் பிழிந்த சாற்றைப் பாலிற் கலந்து புளிக்கவைத்தபோது, அது மிகவும் வெறியைக் கொடுக்கக்கூடியதாயிருந்தது. சோமச்சாற்றைக் குடித்த கடவுளர் அதன் வேகத்தால் செயற்கரும் செயல்களைச் செய்யும் ஆற்றலைப் பெற்றார்கள் என்று பழைய ஆரிய மக்கள் நம்பி வந்தார்கள். அவர்கள் சோமச்சாற்றைத் தெய்வமாகவும் வணங்குவாராயினர். இருக்கு வேதத்தின் ஒரு மண்டலத்திலுள்ள பாடல்கள் முழுமையும், சோமச்சாற்றை வழுத்திப் பாடப்பட்டுள்ளன. இன்னும் வேதத்தின் மற்றைய இடங்களிலும், இச் சோமச்சாறு துதிக்கப்படுகின்றது. இது மிகவும் சிறுபிள்ளைத் தனமான செயல் என்பதை உணர்ந்த பிற்காலத்தார் அவை "சோமன்" என்னப்பட்ட சந்திரனைக் குறித்துப் பாடப்பட்டனவெனக்கூறுவாராயினர்.இதுசிறிதும் பொருத்தமற்றதென வேத பண்டிதர்கள் கூறியுள்ளார்கள். இன்று கள்ளை ஒழிக்கவேண்டுமென மக்கள் உணருகின்றார்கள். அதோடு கள் குடித்தல் கீழ்மக்களின் செயலென்றும் கருதப்படுகின்றது. அவ்வகையான சோமக் கள்ளைத் துதிக்கும் பாடல்களைக் கடவுள் செய்தார் எனக் கூற எவரும் உடன்படுவார்களா? அப்பாடல்கள்தான் தமது சமயத்துக்கு அடிப்படை எனக் கூறும் ஒரு கூட்டத்தினரைத் தமது சமயக் குருமார் எனக் கொள்ளும் மக்கள், பைத்தியக்காரர்போன்றவர்களாவர். இவ்வகையான பாடல்களைச் செய்தவர்களே

* The transference of the same Soma to the moon which ppears in the latter history of ths Indian religion, is hitherto obscure; the Vedas hardly know it. Neither do they m to prepare the way for it-Oriental and linguistic studies ', 10—William Dwight Whitney

தமது கோத்திர முதல்வர் என அனனோர் கூறுகின றனரன்றோ? என்ன அறியாமை!

"உண்ணற்க கள்ளை உணிலுண்க சான்றோரா
லெண்ணப் படவேண்டா தார" —திருக்குறள்.

## நரமேதம்

நரமேதம என்பது மனிதரைககொன்று செய்யப படும யாகம். இவவகையான யாகஙகளைச செய்யும கிரியை முறைகளும, அபபோது பாடபபடும் பாடல் களும், சொல்லபபடும மந்திரஙகளும வேதஙகளிற காணப்படுகின்றன. இது பிற்கால மக்களுக்கு மிகவும காட்டுமிராண்டித்தனமாகத் தோனறினமையால், அவர் கள நரமேத யாகங்களில் மனிதன, யூபததில் (பலிமிரு கத்தைக் கட்டிவைக்கும தூண) கட்டி வைககப்பட்டா னல்லாமல் கொல்லபபட்டானல்லன் என்று பலவாறு எழுதுவாராயினர். இது சோமன என்றால், சோமக்கள அன்று; சந்திரன் எனக் கூறியவர்களின கூற்றை ஒத்தது. மனிதனுயிருந்தாலென்ன, விலஙகாயிருந்தா லென்ன, கொல்லபபட்ட பலிகளின இறைச்சி புரோகி தருககுப பகிர்ந்து அளிக்கபபட்டது. ஆரியர் மாமிச உணவை விலக்கி யிருந்தவரல்லர். மனுஸ்மிருதி ஆட் டுககடாக்களின் இறைச்சியைக் கொண்டு இறந்தவரின் "சிரார்த்தம" செய்யுமபடி கூறுகின்றது.

தைத்திரியப பிராமணத்தில், பிராமண சாதித் தெய்வத்துக்குப் பிராமணனையும, சத்திரிய சாதித் தெய் வத்துக்குச் சத்திரியனையும, மருத்துக்களுக்கு வைசி னையும், தவஙகளுக்குத் தலைமையாயுள்ள தெய்வத் குச் சூத்திரனையும, இருள தெய்வத்துக்குத் திரு யும், நரகத்தெய்வத்துக்கு வாத்தியக்காரனையும் பலியி

வேண்டுமெனக் கூறுகின்றது. இவவாறு நூற்றெழு பதடுெட்டுத் தெயவங்களுக்கும பலியிடவேண்டிய 178 வகை நர பலிகளைபபற்றி அந்நூல் கூறியுள்ளது.[1] "காளிகபுராணம் என்னும் நூலில்," விதிமுறைபபடி செயயபபடும நரபலியினுல் தேவி ஆயிரம ஆண்டுகள் நிறைவு அடைகின்ருள். மனிதத் தசைபபலியினுல் வயிரவர் மூவாயிரம ஆண்டுகள உவந்து நிறைவு அடைகின்ருர். நைவேத்தியம செயயப்பட்ட மனித இரததம உடனே அமுதமாக மாறுகின்றது ஆகவே தேவியை, வணஙகுமபோது தலையும இறைச்சியும நைவேத்தியம் செய்யபபடவேண்டும"[2] எனக் கூறப்பட்டுளளன.

இந்தியாவிற்[3] கறகாலம என்னும நூலில் கூறப்படுவது பின்வருமாறு "வேதகாலத்தில் நரபலி சர்வசாதாரணமானது. இதைக் குறித்த கிரியைமுறைகள், யசுர் வேத சஙகிதைகள, யசுர்வேதப பிராமணஙகள, சாஙகாயன, வைதான சூததிரஙகளிற கூறபபட்டுளளன. யாகஞ் செயபவனின மனைவி பலியிடபபட்டவனை [சவத்தைச்] சேர்தல் (அணைத்தல்) ஆகிய இடககரான கிரியையும நடத்தபபட்டது. அப்பொழுது மந்திரஙகள தொடர்பாகக் கூறப்பட்டன. சில சமயஙகளில் இவவிடக்கரான கிரியைக்கு அனுமதிக்கப் படுவதைபபறறி அரசனின மனைவியருக் கிடையில் போட்டியிருந்ததென்று சொல்லபபடுகின்றது." மக்கள அறிவு வளர்ச்சி பெற்ற காலத்தில் மனிதனை பலியிடுவதறகுப்

[1] Indo-Aryans VOL 2 P. 80 Rajendralala Mitra L.L.D. C.I.E. [2] ibid P. 106. Stone age in India—P. 21 P. T. S. Iyengar [3] The rite includes such repulsive incidents as the introduction of the *sepas* of the *medha* into the *yoni* of the *yajamana's* chief wife, accompanied by the recitation of long strings of mantras-ibid.

பதில் அவன், யூபத்தோடு கட்டிவைத்துப பின அவிழ்த்து விடபபட்டான். நரபலி இடப்பட்ட காலத் தில் நரமாமிசம் புரோகிதரால் உண்ணப்பட்டதெனத் தெரிகின்றது.

## அசுவமேத யாகம்

குதிரையைக் கொன்று செயயும யாகம அசுவ யாகம் எனபபட்டது. மனிதனுக்குப் பதில் குதிரை பலியிடப்பபட்டதாகத் தெரிகினறது யாகத்தில் மாத் திரமன்று, சாதாரணமாகக் குதிரை இறைச்சி ஆரிய மக்களால் உண்ணபபட்டது.[1] குதிரை யாகத்திலும் நர மேதயாகத்தில் செயயபபட்டதுபோன்ற இடக்கரான கிரியை செயயபபட்டது விதவா விவாகத்தில் சொல் லப்படும 'உதிர்ஷ்வ ஆரி' (Udeishva ari) எனனும மந்தி ரம் பிணச்சடங்குகளிற சொலலபபடுகினறது. அது இடக்கரான கிரியையின் பின்பு, குதிரையோடு படுத் திருக்கும அரசியை, அவளுக்காகக் காத்து நிறகும் அர சனை அடையுமபடி சொல்லப்படும மந்திரமாகப் பயன் படுத்தபபட்டது.[1]

---

[1] The people ate both animal and vegitable food: horses (A. V. VI. 71. 1) bulls (R. V. i. 164 4) buffaloes (R. V. V. 29. 7) rams (R. V x 27. 17) and goats (R. V. I. 162. 3) were killed on slunghter benches (suna) R. V. X 86. 16) cooked in coldrons (R. V. iii 53. 22) and eaten—Life in ancient India P. 49 P. T. S. Iyengar.

[2] The famous mantra beginning with *udishva ari*, now used in funeral ceremonees and hence interpreted to refer to widow remarriage, has really no such implication, because its proper use is in connection with the horse or the human sacrifice, where the queen was called upon by means of the mantra to rise from the side of the sacrificial victim, after the above-described rite was over, and rejoin her living husband who was waiting for her-Stone age in India P. 21

மனிதனுக்குப் பதில் குதிரையும், குதிரைக்குப் பதில், எருமை அல்லது பசுவும், பசுவுக்குப் பதில் ஆடும், பின்பு விலங்குகளுக்குப் பதில் பலகாரங்களும் பலியாகக் கொடுக்கப்படலாயின. வேதம் என்பது இவ்வகையான யாகங்களுக்காக மாத்திரம் எழுந்த நூலேயாகும்.

## வேத கால மக்கள் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

சில பிராமணர், புரோகிதர், குருமார்களுக்கு அதிக நிலங்கள் இருந்தன. இருடிகள் பாடல்களைச் செய்தார்கள். அவர்கள் அதற்குக் கைமமாறாகப் பொன்னாற் செய்த பூக்கள், கழுதைகள், கம்பளி ஆடு, எருது, மூங்கில், பதனிடப்பட்ட தோல்கள், அடிமைப்பெண்கள், முத்தினால் அலங்கரிக்கப்பட்ட குதிரைகள், தேர்கள், வீடுகள் முதலியவற்றைப் பெற்றார்கள்

போர்செய்யும் வகுப்பினரால் யுத்தம் செய்யப்பட்டது; இருடிகளும், பிராமணரும் படைகளின்பின் போர்க்களத்திற்குச் சென்று போரில் பங்கு பற்றினார்கள். போர்க்கடவுளாகிய இந்திரனை வணங்குவோர் வெற்றியை வேண்டி, அவனுக்குச் சோமக்கள்ளையும், எருமை மாட்டு இறைச்சியையும் படைத்தார்கள்.

போரில் தோற்றவர்களுக்குக் கொடிய தண்டனை விதிக்கப்பட்டது. இந்திரன் விருத்திரனை தோற்கடித்து அவனுடைய விதையை அடித்து விட்டான். அவர்கள் தருணம் வாய்த்தபோது பகைவருடைய விதைகளை அறுத்துவிட்டார்கள்.

மக்கள் சாதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். மணத்தைப்பற்றிய கட்டுப்பாடுகள் இருக்கவில்லை. ஒரு பெண் பிராமணரல்லாத பத்துக் கணவரை முன் வைத்திருந்தபோதிலும், ஒரு பிராமணன் அவள கையைப பிடிப்பானயின், அவள் அவனுடைய மனைவியாவாள். பிராமணப்பெண்கள மற்றவர்களோடு இருந்தபோதும, குறறமடைந்தவாகளாகக் கருதபபட மாட்டார்கள். அவர்கள் மறுபடியும் அவாகளின கணவரிடம சேர்க்கபபடலாம். பிராமணரின் மனைவியரை வீட்டுக்குள பூட்டி வைததிருந்தவர்களமீது திட்டிக்கூறும மொழிகள் கூறப்பட்டன.

பிராமணர், தாம மனிததெயவஙகள எனக் கூறினாாகள. அவர்களுக்குத் தீங்கிழைத்தவர்கள மேலேயிருக்கும் கடவுளரால் கடுமையாகத் தண்டிக்கபபடுவார்கள, தங்களை மதியாதவர்களைப் பிராமணர் தண்டிக்கலாம. அப்பொழுது அவர்களுடைய நா், வில்லின நாணகினறது; சத்தம அமபாகின்றது. அவர்கள் மந்திரவித்தையில் வல்லவர்களாயிருந்தார்கள. பிராமணனின் பசுவைப் பிராமணரல்லாதார் உண்ணுதல் ஆகாது. அபபடிச்செய்தால் பொல்லாத பாவம் சூழும. அவன்மீது உமிழ்ந்தவன் இரத்த ஆற்றில் இருந்து மயிரைத் தினபான். அரசர் திரவியஙகளைப பிராமணருக்குத் தானமாகக் கொடுத்தார்கள். இரட்டைக் கன்றுகள் ஈன்ற பசு, பிராமணனுக்குக் கொடுக்கபபடவேண்டும்.

மக்களின் மதுவகைகள் சோமமும், சுராவும். சோமக் கொடி, கற்களால் நசுக்கி அரைக்கப்பட்டுக் கம்பளி ஆடையிலிட்டுப் பிழிந்து பாலிற் கரைத்துக் குடிக்கப் பட்டது. சோமம் இனிப்பானதென்றும், உண்டவர்களை

ஒன்றாகப் பேசச்செய்யும் எனவும் படுகின்றது. வால் கோதுமை அல்லது அரிசியிலிருந்து இறக்கப்பட்ட சுரா, வாலையினால் வடிக்கப்பட்டது.

விதவைகளை மறுமணஞ்செய்தார்கள். விதவைகள் கணவனின் சகோதரனைச் சேருதல் குற்றமாகக் கருதப் படவில்லை. யுத்தத்தில் பெண்கள் வெற்றிப்பொருளா கக் கருதப்பட்டார்கள். பெண்களின் மனம் புலியின மனத்துக்குச் சமமானது. ஆண்கள் பெண்களோடு போர்செய்தல் தகுதியில்லாத செயலென்று இருடிகள் கருதவில்லை. குருமார் தலையில் ஒருபிடி மயிர் விட்டுத் தலையைச் சிரைத்தார்கள். முனிவர்கள் தலைமயிரை வளரவிட்டிருந்தார்கள். அவர்கள் அழுக்கு நிறமான ஆடையை உடுத்தி அலைந்து திரிந்தார்கள். அவர்கள் கடவுளாகக் கருதப்பட்டார்கள்.

இல்லறத்தாருடைய தினசரி வாழ்க்கை மந்திர வித்தைகள் பலவற்றோடு தொடர்புடையதாயிருந்தது. ஒவ்வொரு வியாதியும் ஒவ்வொரு வகைக் கெட்ட தேவதையால் உண்டாகின்றது; அல்லது பகைவரின் சூனிய வித்தையால் உண்டாகின்றதென்று கருதப்பட்டது. இந்திரன் ஒரு தாயத்து அணிந்திருந்தான். வருண னும் அவ்வாறு ஒன்று அணிந்திருந்தான். மந்திரங் களினால் அரசன் சிங்கத்தின் தன்மை அடைந்து மக் களை விழுங்கத்தக்கவாக னாகினான்.

சோமயாகத்தில் விலங்குகள் கொல்லப்பட்டன. விலங்கு கட்டிவைத்துக் கொல்லப்பட்டது. அதன் வெளியீரல் தெய்வங்களுக்குக் கொடுக்கப்பட்டது. பலி கொடுக்கும்போது தெய்வங்களின் இரகசியமான பெயர் உச்சரிக்கப்பட்டது. அல்லாவிடில் பலி அவர்களை அடையாது.

மந்திரகால இறுதிக்குமுன கிரியைகள் முற்றாக வளர்ச்சி யடைந்திருந்தன. சிறந்த பெரிய கிரியை சோம யாகமாகும். சோமப்பூண்டு சோம அரசன் எனப் பட்டது. அபபூண்டு யாகசாலைக்குக் கொண்டுவரப் பட்டது. அஙகே அதற்குப பல துதிகள பாடப்பட்டன. ஏழு புரோகிதர்கள் தண்ணீர் தெளித்தார்கள. மாட்டுத் தோலின மீது வைக்கப்படட இரணடு கற்களினிடையே வைதது அது நசுக்கப்பட்டது; அல்லது உரலில் இட்டு உலக்கையால் இடிக்கப்பட்டது. பின்பு ஒரு தட்டில் வைததுப பிழிநது சாறு எடுக்கபபடடது. சாறு கமபளி ஆடையால் வடிக்கப்பட்டது. அதர்வண புரோகிதன அதனமீது பாலை ஊறறிப பத்து விரல்க ளால் கலக்கி ஆறறினான். அது மரச்சாடிகளுக்குள விட்டுப பலிபீடததில் வைக்கப்பட்டது. கடவுளுக்கு வைத்தபின், அது புரோகிதருக்குக் குடிக்கக் கொடுக்கப் பட்டது. சோமச்சாறு ஒரு நாளில் மூனறுமுறை கொடுககப்பட்டது. அதனோடு மாவினாறசெயத பல காரமும வைக்கப படடது. சில சமயஙகளில சோமச் சாறு உணவோடு சேர்த்துச் சமைததுப படைக்கப் பட்டது. இந்திரன் அளவில்லாத சோமச்சாற்றைப் பருகிய பெரிய கடவுளாவன. பிறந்த தினத்திலேயே இந்திரனுக்கு அவன தாய அதனைப் பருகக் கொடுத் தாள. அவன் முப்பது மிடாக்கள நிறைந்த இரசத்தை ஒரே தடவையில் பருகினான. சோமன இருடிகளுக்குப் பாடல்களைப் பாடும ஆறறலைக் கொடுததான். சோம யாகத்தில் நடப்படும யூபம வனஅரசன எனபபட்டது. அது தருபபைப் புல்லின மீது வைக்கபபட்டது. அதற்கு ஆபரணஙகளும் மாலைகளும சூட்டப்பட்டன; பலவகை நிறங்களாலும் அது அலஙகரிக்கப்பட்டது. அது யாகத்தீக்குக் கிழக்கே நடப்பட்டது பலி விலங்கு

அதில் கயிற்றுற் கட்டப்பட்டது. விலங்கின் தலை, அரை, கால்கள் என்பன கட்டப்பட்டன. அதன் ஒன்பது வாயில்களையும அடைத்துப பிடித்து, அது சாகுமவரை இரகசிய உறுப்பின்மீது அடிக்கபபட்டது. மிருகம, பட்டடையின்மீது வைத்துப பக்குவமாக வெட்டப் பட்டது. வெட்டும்பொழுது ஒவவொரு உறுபபின் பெயரும் சொல்லித் துதிக்கபபட்டது. உறுபபுககளின் மூட்டுக்கள திறமையோடு பிரிக்கபபட்டன. இறைச்சி சமைத்துத் தெய்வஙகளுககுப படைககபபட்டது; பின்பு வழிபடுவோர் அதனை உண்டாரகள. பிற்கால அசுவ மேத யாகஙகள போலல்லாது, முறகாலக் குதிரையாகம் மிகவும சாதாரணமாக இருநதது. குதிரைக்கு முன்னுல் புள்ளியுளள ஆடு விடபபட்டது. குதிரையும பலிப் பொருள்களும் விலையுயர்நத போர்வையால் மூடப் பட்டன. ஆடும குதிரையும மூன்று முறை குண்டத்தைச் சுற்றிக்கொண்டு வரப்பட்டன. குருமார் யூபத்தையும் சமைக்கும் பாத்திரஙகளையும கொண்டு பின்னே சென் ருர்கள், குதிரையைப பலியிடும இடத்தில் விட்டுப் அதற்குப புல் கொடுக்கப்பட்டது. குதிரை கமபத் தோடு கட்டிக் கொனறு, மறற மிருகஙகளைப போல உண்ணபபட்டது. பலியிடப்பட்ட விலங்கு இறக்க வில்லை. கடவுளரிடம சென்றது என்று கருதபபட்டது.

இந்திரன் பெரிய கடவுளாயிருந்தபோதிலும, விலிஸ் தெஙகா என்னும ஓா அசுரப்பெண, அவனைக் கடவுளர் களின் இடத்திலிருந்து தனனிடத்துக்கு மந்திரத்தால் இழுத்தாள். பின்பு அவன் பெண்களினிடையில் பெண் வடிவிலும், ஆண்கள இடையில் ஆண் வடிவிலும் இருந் தான். மற்றக் கடவுளர்களைப் போல, இந்திரன் குணங் களில் மாத்திர மல்லாமல், வடிவிலும் மனிதனைப் போலவே இருந்தான். சௌந்திராமணி என்னும் யைமில் அவன் வடிவம் செய்துவைக்கப் படுகின்றது.

**உருத்திரன்**

ஆரியருடைய புயற்கடவுள், பிற்காலத்தில் உருத்திரன் என்னும் பெயரைப் பெற்றது. உருத்திரன் பிற்காலத்தில் சிவனைக் குறிப்பதாகக் கொள்ளப்பட்டு, உருத்திர சிவன் என்னும் பெயரைப் பெறுவதாயிற்று. ஆரியர், இந்திய நாட்டை அடைந்தபின் பழங்குடிகள் வழிபட்ட தெய்வங்கள் பலவற்றைத் தமது கடவுளர்களோடு சேர்த்துக் கொள்வாராயினர். பழைய ஆரியக் கூட்டத்தினின்றும் பிரிந்து சென்று ஆங்காங்கு குடியேறியுள்ள மற்றைய ஆரிய மக்களுக்கு அறியப்படாதிருந்தனவும் இந்திய ஆரியரால் வழிபட்டனவுமாகிய கடவுளரை அவர்கள் இந்திய நாட்டினின்றும பெற்றார்கள் ஆதல் துணியப்படுகின்றது.

அவ்வாறு பெற்ற கடவுளரில் சிவன கடவுள் ஒருவர். சிவன் என்பதற்குச் சிவந்தவன எனபது பொருள். சிவன் என்பதே சிவந்தவன் என மொழி பெயர்க்கப்பட்டு ஆரிய வேதங்களில் வழஙகபபடுவதாயிற்று. சிவனை ஒத்த கடவுளை மற்றைய ஆரிய மக்கள் அறியாதிருந்தனர். சிவன் என்பதற்கு இந்து ஐரோப்பிய ஆரிய மொழிகளில் உற்பத்தி காண முடியவில்லை. உருத்திரன் ஆரியரின் கடவுளல்லா என, மேல் நாட்டுக் கீழ்நாட்டு ஆராய்ச்சி வல்லார் ஆராய்ந்து கூறியுள்ளார்கள்.

"வருணன், உருத்திரன், துவஷ்டா, அதிதி முதலிய கடவுளரைத் திராவிடமொழி வழஙகும மக்களிடமிருந்து ஆரிய மக்கள் பெற்றுக்கொண்டனர். திராவிட மொழி, வேதமொழியைப் பெரிதும் மாற்றமடையச் செய்ததெனக் காட்டியுள்ளோம். இதனை ஒபபவே ஆதிக் குடிகள் வழிபட்ட கடவுளரின் பெயர்கள், ஆரியச்சொல் வடிவங்களை அடைந்து வேதகாலத் தெய்வங்களோடு

இடம பெற்றன. அக்கட்வுளரின் பெயர்களுக்கு நேரானவை இந்துசேர்மனிய மொழிகளில் காணபபடவில்லை; அவ்வகையான பெயர்கள இந்தியப பெயர்கள என்றே கொள்ளுதல் தகுதியுடையது." இவ்வாறு மந்திரகாலம எனனும் நூலிற் காணபபடுன்றது.[1]

மேற்கண்ட நூலில் உருத்திரனைக் குறித்துக் கூறியிருப்பது வருமாறு.

"உருத்திரன் திராவிட மொழி வழஙகும மக்களின் இனனொரு கடவுளாகத் தெரிகினறது. அவர் மலைத் தெய்வமாகக் காணப்படுகிறார். அவருக்குப பினனிய சடை உண்டு, நிறம கபிலம் (மஙகிய சிவபபு); உடைத் தோல்;.... ....இவவகையான கடவுள இமயமலை, அல்லது விந்தியமலை இடஙகளில் வாழ்ந்த மக்கள இடையே தான், தோன்றி வளர்ச்சியடைந்திருத்தல் கூடும்; சமவெளிகளில் வாழ்ந்த இருடிகளிட மன்று. உருத்திரன் என்பதற்குச் சிவந்தவன் என்பது பொருள். இது சிவன் என்னும தமிழ்பபெயரின் மொழி பெயர்பபாகக் காணப படுகின்றது. துவஷ்டா கைத்தொழிலாளரின் கடவுள்.

---

[1] The gods of the second group (i. e. Varuna, Rudra, Tvushta and Adite) seems to have been taken over from the Dravidian-speaking tribes of India. It has been already pointed out that the Dravidian languages profoundly affected the Vedic language. Similarly The gods worshipped by the tribes that gradually accepted this language must have been 'Aryanized' and adopted into the Vedic pantheon. Those vedic gods the etymology of whose names is not patent and who have no analogues in other Indo-germanic dialects must have been Indian gods to whom such treatment was accorded—The age of the mantras-P. 123—P. T. S. Iyengar.

க்கடவுளின் இடத்தை இந்திரன் எடுத்துள்ளான். அதிதி என்னும சொல்லின் உற்பத்தி முறகாலத் தற்கால ஆராய்ச்சியாளருக்கு மயக்கத்தை உண்டு பண்ணிற்று. அப்பெயரின் மூலம, கண்டுபிடிக்கபபடவில்லை. விஷ்ணு என்னும் பெயர் விண் என்னும் தமிழ் அடியாகப் பிறந்ததாகலாம. சிவன், விஷ்ணு, அமமன், என்போர் இன்று இநதிய மக்களின சிறந்த கடவுளராவர். இருடிகளுக்கு இவர்கள் சிறு தெயவஙகளாகக் காணபபட்டனர்; இருடிகள் விருப்பக குறைவோடு இவாகளைத் தமது தெய்வஙகளோடு சேர்ந்தார்கள ; ஆனல் மக்கள அக்கடவுளரை வணஙகினர், அதனல் அவை பெரிய தெய்வஙகளாயின.

ஆரியரின வருணன் எனனும் கடவுட்பெயர், விரி என்னும் அடியாகப பிறந்ததெனக் கூறுவர் கோவின் என்னும          யர்[3]

[1] Ibed—P. 125 & 126

Civa is a god unknown to the Vedas, his name is a word of not frequent occurrence in the hymns, indeed, but means simply 'prosperous'; not even in the Atharvan it is the epithet of a particular divinity, or distinguished by the useage, from any other adjectives. The precise relation between Civa and Rudra is not yet satisfactory traced out—

—Oriental and linguistic studies P. 30–William Dwight whitney—

[3] A history of Indian literature—P. 52—Herbert H. Goven

## பசு இறைச்சி குதிரை இறைச்சிகள் ஆரியருக்கு விலக்கு இல்லை

வேதகால ஆரியர் இறைச்சி வகைகளைத் தாராள மாகப் புசித்தார்கள். அவர்களின் உணவில் இறைச்சி வகையே முதன்மையாயிருந்த தென்பதைப்பற்றி ஒரு வரும் ஆச்சரியமுற வேண்டியதில்லை. வெள்ளாடு, செம்மறியாடு, பசுக்கள், எருமைகள் யாகங்களிற் கொல் லப்பட்டன. அக்கினி, பசுக்களைப் புசிப்பவன் என்று வேதம் கூறுகின்றது. பாரத்துவாசர் தனக்கு உணவு வேண்டுமென்று இந்திரனைத் துதித்தார். அவர் உண வில் பசு முதன்மையுடையது. முக்கியமான விருந்து வந்தால், பெரிய மாடு அல்லது பெரிய ஆட்டைக் கொல் லும்படி சதபதப் பிரமாணங்கூறுகின்றது. அரசன் அல் லது பெருமகன் ஒருவன் விருந்தாக வந்தால், பெரிய எருதை அல்லது மலட்டுப் பசுவைக் கொல்லவேண்டு மெனவும் அந்நூல் கூறியுள்ளது.

இந்திரனுக்கு எருதுகள் பலியிடப்பட்டன. சமைக் கப்பட்ட மாட்டு இறைச்சியில் இந்திரனுக்கு மகிழ்ச்சி உண்டு. எருமைகளும் அவனுக்குப் பலியிடப்பட்டன. அவைகளின் இறைச்சியைச் சமைத்து இந்திரனுக்குப் படைத்தபின், வழிபடுவோர் அதனை உண்டனர். சில சமயங்களில் முந்நூறு எருமைகளுக்குமேல் பலியிடப் பட்டன. ஒருவர் இறந்தால் உடலைக் கொளுத்துவதன் முன் பசுவைக் கொன்று அதன் இறைச்சியால் அது மூடப்பட்டது. குதிரைகளும் யாகத்திற்குக் கொல்லப் பட்டன. அதன் இறைச்சியை வறுத்தும் அவித்தும் கடவுளுக்குப் படைத்தபின், அடியவர் அதனை உண்டு சோம இரசத்தையும் பருகினர். இறைச்சியை விற்பனை செய்யும் கடைகளும் இருந்தன. பாரதம், நாளொன் றுக்கு 2000 பசுக்களைக் கொன்று பலருக்கு விருந்து

அளித்து வந்த இரந்தி தேவ்ரைபபற்றிக் கூறுகின்றது! புத்தர் தோன்றிக் கொல்லாமையைக் கடியும் வரையில் ஊன் உணவு கொள்ளும் வழக்கு, வடநாட்டவர் எல்லோரிடையும் இருந்து வந்தது. வேதகால ஆரியர், மாட்டு மாமிசம் உண்ணுதல் இழிவு என்று கருதவில்லை. இருக்கு வேத காலத்தின் கடைபபகுதியில் பசு, எருதுகளைப்பலியிடுவதைபபற்றி வெறுப்பு உண்டாயிருந்தது.

ஆரியர் இவ்வாறு செய்யும் யாகங்களுக்கு அசுரர் எதிராக இருந்து வந்தனர். அவர்கள் அவ்வகை யாகங்களை வலிமையால் தடைசெய்ய முயன்றுவந்தார்கள். யூபத்தில் மிருகங்கள் கட்டப்பட்டதும், அசுரர் அதனை நோக்கி வந்தார்கள். ஆரியர் யாகச சாலையைச சுற்றி ஒன்றன்பின் ஒன்றாக மதில்போல நெருப்பை வளர்த்து, அசுரரை அணுக முடியாமற செய்தனர். இராவணனாதியோரும் ஆரியமுனிவர்கள் செய்யும் யாகங்களை அழித்து வந்தார்கள் என இராமாயணத்திற் படிக்கிறோம்.

## கிருட்டிணர்கள்

வேத காலத்தில் இந்திரனுக்குப் பகைவராகிய கிருட்டிணர்கள் இருந்தார்கள். கிருட்டிணர் என்பது ஒரு மக்கட் கூட்டத்தினருக்குப பெயராகவிருந்தது. இக் கூட்டத்தினரிடையே தேவகியின் புதல்வனான கண்ணன் தோன்றியிருத்தல் கூடும். கிருட்டிணர்களுக்குத் தலைவனான கிருட்டிணன் அம்சுமதி (யமுனை) ஆற்றங் கரையில் பத்தாயிரம வீரருடன் இருந்தான் என்று இருக்கு வேதம் கூறுகின்றது. ஆரியருக்காக, இந்திரன் கிருட்டிணராகிய பகைவரை அழித்தான். இந்திரன் 50,000 கிருட்டிணரைக் கொன்றான் என்று வேதம கூறுகின்றது. கிருட்டிண இந்திரரின் போர்கள், வேதகாலத்தில் தமிழருக்கும் ஆரியருக்கும் நிகழ்ந்த போர்களைக்

## தாசுக்கள்

தாசுக்கள் ஆரியரின் விரோதிகள் என்றும, அவர்களுக்கும் ஆரியருக்கும போர்கள நிகழ்ந்தன வென்றும் வேதங்களைக் கொண்டு அறிகினறோம். தாசுக்கள் கறுப்பு நிறத்தினர் எனப்படுகின்றனர். இவர்கள ஆரியரின்கடவுளரை வழிபட்டிலா. தாசுக்கள என ஆரியராற கூறப்பட்டோா, இந்தியப் பூர்வ மக்களே என ஆராய்ச்சியாளர் கூறியுளளார்கள. தாசுக்கள பட்டினங்களில் வாழ்ந்தாாகள. அவர்களுள பல அரசர்கள் இருந்தார்கள. அவர்களிடத்தில் திரண்ட செல்வம் இருநதது. பசுககள, குதிரைகள, தேர்கள் முதலியவை அவர்களின் செல்வஙகள. நூறு கதவுகளுளள நகாகளுள வைத்துக் காககபபட்டன. இந்திரன அவைகளைக கவர்ந்து, தனனை வழிபடுவோராகிய ஆரியருக்குக கொடுத்தான. தாசுக்கள மிகவும் செல்வம உடையவர்களாகவும், சமவெளிகளிலும மலைகளிலும் நிலமுடையவாகளாகவும இருந்தனர். அவர்கள பொன் அணிகளை அணிந்தனர். அவாகளுக்குப் பல கோடடைகள இருநதன. தாசுக்கள் பொன் வெளளி இரும்பு முதலியவைகளாலமைத்த கோட்டைகளில் வாழ்ந்தாாகள. இந்திரன தேவதாசர்களாகிய ஆரியருக்காகத் தாசுக்களின நூறு கற்கோட்டைகளை அழித்தான். அக்கினி அவனுக்குத் துணையாகத் தாசுக்களின் பட்டினஙகளை எரித்தான். ஆரியரிடமிருந்து கவர்ந்த மாடுகளை வைத்திருந்த மறியற் கூடங்களைப் பிரகஸ்பதி உடைத்தெறிந்தார். தாசுக்கள் போரில் தேர்களைப் பயன்படுத்தினர். தாசுக்கள் ஆரியரின் யாகஙகளை அழித்து, ஆரியரின் தெய்வங்களுக்காக வைக்கப்பட்டிருந்த மதுவைப் பருகினர்கள்.

73062

## பாணியர் (Panis)

பாணியர் எனறும ஒரு வகுப்பினரைப் பற்றியும் வேதங்கள் கூறுகினறன. பாணியா என்போர் வணிகராகிய திராவிட மக்கள எனப்படுகின்றனர். தாசுக்களை ஒப்ப,இவர்களும ஆரியரின் பகைவராயிருந்தனர். பாணியர் எனபபட்ட மக்களே மததியதரைக் கடலின் மேற்குக் கரை ஓரஙகளிற் குடியேறிப, பினீசியர் என்னும் பெயர் பெற்றனர் எனச் சில வரலாறறுசிரியாகள கருதுகின்றனர். பினீசியரின் எழுதது மொாகளுசதரோா எழுத்துக்களின் திரிபாகிய பிராமி எழுத்துக்களினினறும பிறந்தது எனறு ஆராயச்சியாளர் கணடுள்ளார்கள.

## பிராமணங்கள்

வேதங்களிலுள்ள பாடல்கள மந்திரங்கள் எனப்படும். மந்திரஙகளாகிய பாட்ல்கள் செயயப்பட்டதன் பின்பு, கிரியைகள வளர்ந்தன. ஆகவே மந்திரஙகள் கிரியைகளுக்கு ஏறற முறையில் பல தொகுப்புக்களாகத் தொடுக்கப்பட்டன. அத்தொகுப்புக்களுக்குச் சங்கிதை என்று பெயர். பிராமணங்கள என்பன கிரியை முறைகளை விளக்கி எழுதப்பட்ட வசனபாகங்கள். இவைகளும் வேதங்களுட் சேர்க்கப்பட்டுள்ளன. ஆகவே வேதங்களில் மந்திரம் பிராமணம என இருபகுதிகள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளிற் சென்று குடியேறிய ஆரியர்களுககு வேதஙகளும், மந்திரங்களும், பிராமணங்களும் இல்லை. இந்திய நாட்டுக்கு வந்த ஆரியருக்கு இவைகள் இருக்க வேண்டிய காரணம, அவர்கள் இந்தியாவில் வாழ்ந்த பூர்வ மக்களிடத்திற் காணபபட்டன போன்றவற்றைத் தாமும் பின்பற்றிச் செய்துகொண்டமையினாலே யாகும்.

"இலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க்
ஙினம் (குறள்-452)

பிராமணக்கிரியை முறைகள், திராவிடமக்களின் ஆகமகிரியைகளைப் பின்பற்றிச் செய்யப்பட்டன வென்பது ஆராய்ச்சி வல்லார் கருத்து.*

[1]"ஆரியர் சுறலெச் என்னும் ஆற்றைக் கடப்பதன் முன், அவர்களின் சமயம் பூர்வமக்கள் கொள்கைகளோடு கலக்கவில்லை என்பது உண்மையே. பிறகாலச் சம்கிதைகளையும் பிராமணங்களையும் குறித்து அவ்வாறு கூற முடியாது." ஜி. ஆர். ஹன்ரர்.

பிராமணங்களைப் பயின்ற சிலர், அரசருக்கும் செல்வருக்கும் புரோகிதராயிருந்து யாகங்களை நடத்தினர். வேதபாடல்களை நோக்கும்போது அவை யாகங்களுக்காகவே செய்யப்பட்டனவாகத் தெரிகின்றது. யாகங்களைப் புரோகிதராக இருந்து செய்யும் மக்களே வேதங்களைப் பயின்றனர், பின்பு அத்தொழில் பரம்பரைத் தொழிலாக மாறியதால், அவர்கள் ஒரு சாதியாராகப் பெருகினர். அவர்களே பிராமணராவார். அவர்கள் மறு பிறப்பைப்பற்றி அறிந்திருக்கவில்லை. ஆகவே அதனை அடிப்படையாகக் கொண்ட தத்துவ அறிவும் அவருக்குத் தெரியாதிருந்தது.[2]

---

*The living Hindu religions of today from Cape Comorin to the remote corners of Tibet is essentially Tantric. Even the genuine Vedic rites that are preserved and are supposed to be derived straight from The Vedas *e. g* Samdya have been modifed by the additon of the Tantric practices—Outline of philosophy—P. 130-P. T. S. Iyengar

[1]Riddle of Mohanjo Daro—New Review VOL. III [2]The Rig-veda coitains no traces of the beyoud, a Couple of passages in the last book which speak of the soul of the dead man as going to the waters on plants. It seems handly likely that so for reaching a theory should have been developed from the stray fancies of one or two later Vedic poets. It seems more probable that Aryan settlers received the first impulse in the direction from the original inhabitants of India—Sanskrit Literature P. 387. Prof Macdonell.

## ஆரணியகங்கள்

பிராமணங்கள தோன்றியபின் ஆரணியகங்கள தோனறின. ஆரணியகங்கள என்பவை, பிராமணர் காட்டில் வாசம் செய்யும்போது படிக்கவேண்டியவை. பிராமணங்களில் காணப்படும் கிரியைகளும இன்னொருவகையான கருத்துக் கொடுக்கும் பொருட்டு இவை தொடக்கத்தில் எழுந்தவையாகத் தெரிகின்றன. பிரிண்ட ஆரணியத்தில் காணப்படும் ஒன்றை இஙகு எடுத்துக் காட்டாகத் தருகின்றோம்.[1]

ஓம், விடியற்காலம யாகக் குதிரையின் தலை; சூரியன் அதன் கண்; வாயு அதன்மூச்சு; அதன் வாய் எங்கும் நிறைந்த நெருப்பு; ஆண்டுகள அதன் உடல்; வானம்முதுகு; வெளி வயிறு; பூமி பாதங்கள்: துருவங்கள் இடுப்புக்கள; அதன் இடையேயுளளவை விலாக்கள்; பருவகாலங்கள உறுப்புக்கள, மாதமும் அதன் பக்கங்களும் மூட்டுக்கள்; இரவும்பகலும் கால்கள்; நட்சத்திரங்கள் எலும்புகள்; முகில்கள்தசை; பாலைவனங்கள் உணவு; ஆறுகள் குடர்; மலைகள் பித்தப்பையும் மூச்சுப்பையும்; பூண்டுகளும் மரங்களும் மயிர்கள்; உதயமாகும் ஞாயிறு முன்பக்கம்; படும் ஞாயிறு பின்பக்கம்; அதன் கொட்டாவி மின்னல்; கனைப்பு இடி; மூத்திரம் மழை; சத்தம்பேச்சு; பகல் யாகப் பாத்திரம்போல் எழுந்து முன்னே நிற்கின்றது, அதன் பிறப்பிடம் கீழ்கடல்; இரா யாக பாத்திரம்; அதன் பிறப்பிடம் மேல்கடல்; இராப்பகல் என்னும் யாகப் பாத்திரங்கள் குதிரையைச் சூழ்ந்துள்ளன; பந்தயக் குதிரையைப் போல அது தேவரைக் கொண்டு செல்கின்றது; போர்க் குதிரையைப் போலக் கந்தருவரைக் கொண்டு போகின்றது; வேகமான குதிரையைப்போல இராக்கதரைக் கொண்டு போகின்றது. சாதாரண குதிரையைப் போன்று மனிதரைக் கொண்டு செல்கின்றது. கடல் அதன் நண்பன். அது அதற்குப் பிறப்பிடம்.

---

[1] The System of the Vedanta—P. 8-or Paul Deussen

பிராமணங்களில் கூறப்படும் கிரியைகளால் பயனில்லை எனக்கண்ட பிராமணர், ஆரணியகங்கள் மூலம் பிராமணக் கிரியைகளுக்கு வேறு பொருள் கற்பிப்பாராயினர். இதனால் அவை பிராமணங்களுக்கு மாறுபட்டனவாயிருந்தன.[3] ஆரணியகங்கள் தோன்றிய பின்பு உபநிடதங்கள் எழுந்தன. இருக்கு வேத காலத்தில் காட்டில் சென்று தவஞ் செய்தலாகிய வழக்கு ஆரியருக்கிடையில் காணப்படவில்லை யெனத் தத்தர் கூறுகினரார். இவ்வழக்கம் ஆதிக் குடிகளிடத்திற் காணப்பட்டிருக்கலாம் அதனைப் பின்பற்றியே ஆரியப் பிராமணரும் முதுமைக் காலத்தில் காட்டிற் சென்று தவஞ்செய்தாராகலாம். முதுமையில் தனிமையிலிருந்து தவஞ் செய்தல் தமிழர் வழக்கு எனத் தொல்காப்பியங் கூறுகின்றது. ஆரிய இருடிகள் காட்டிலிருந்து ஏதோ மந்திர வித்தை போன்றவைகளைப் புரிந்து அரசரையும் பொது மக்களையும் தமக்கு அஞ்சும்படி செய்தனர். இருடி, முனிவரைக் கண்டால் அரசரும் பிறரும் சாபங்களுக்கு அஞ்சி அவர்கள் வேண்டுவன புரிந்தார்கள் எனப் புராணங்கள் கூறுதல் காண்க. தென்னாட்டு முனிவர் வடநாட்டு முனிவர் போன்றவர்களல்லர் என்றும், அவர்கள் யாருக்கும் அஞ்சுவதில்லை என்றும், அவர்களைக் கண்டு எவரும் அஞ்சுவதுமில்லை என்றும், விண்டர் நிற்ச் (Winternitz) எனனும் சேர்மன் ஆசிரியர் கூறுவர்.

## உபநிடதங்கள்

உபநிடதங்களே தமிழர்களின் மறை. உபநிடதங்களிற் கூறப்படும் ஞானங்கள் ஏட்டில் எழுதப்பட்டிருக்கவில்லை. அவை குருமாணக்கர் முறையில் தலைமுறையாக வந்தது. உபநிடதப்பொருள்களைப் பிராமணர் அறிக உண்மை ஞானத்தை தேடி அலைந்து

[3] Wisdom of the East—P .13—L. D. Barnett M. A. Litt. D

திரிந்த பிராமணர் அரசவகுப்பினர் பாதங்களில் மாணுக்கராக இருந்து உபநிடத ஞானங்களைக் கற்றனர்[1] தாம் கற்றறிந்த பொருள்களை அவர்கள நூல்களாகச் செய்து அவைகளுக்கு உபநிட்தம் எனப பெயரிட்டனர். உபநிடதம் என்பதற்குக் கிட்ட இருந்து கேட்கப்படுவது என்று பொருள. இரகசியம் எனவும அது வழங்கும். உபநிடதஙகள், உயிர் உலகம கடவுள என்னும் முப்பொருள்களைப் பற்றி ஆராயும் நூல்கள. உபநிடதங்கள் பிராமணஙகள ஆரணியகஙகளை ஒபப வேதஙகளோடு சேர்க்கப்பட்டது. உபநிடதஙகளுக்கு வேதமுடிவு என்பது பொருள. வேதங்களைப் பிராமணன ஆசாணுயிருந்து மற்ற உயர்ந்த வருணத்தவர்களுக்குக் கறபிக்கலாம். பெண்களும் சூத்திரரும வேதஙகளைப படிக்கவும் கேட்கவும் ஆகாது. உபநிடத ஞானஙகளின அரச வகுப்பினரும், பிறரும், பெண்களும திறமையுடையவர்களாயிருந்தனர். ஆராயசசியாளர் உபநிடதஙகள தமிழருடையதே என முடிவு செய்துளளார்கள. உபநிடத ஞானமே புத்த சைன மதங்களுக்கும சாஙகியம் முதலிவைகளுக்கும் அடிப்படை. அக்பர் காலத்தில் அல்லா உபநிடதம் என ஒரு உபநிட்தமும் செய்யப்பட்டது. காலந்தோறும் பல உபநிடதஙகள எழுதப்பட்டன.

---

[1]—indications intimate that the real guardians of these thoughts were not originally the priestly caste, absorbed in the ceremonial, but rather the caste of the Kshatriyas. Again and again in the upanishads we meet the situation that the Brahman begs the Kshatrya for instruction which the latter after several representations of the unseemliness of such a proceeding imparts to him—The system of vedanta—Dr. Paul Deussen.

## புராணங்கள்

புராணங்கள் என்பன கோயிற் பூசகராலும், பிராமணராலும் பொதுமக்களின் அறிவை மழுக்கித் தாம் நல்வாழ்வு அடையும்படி எழுதி வைக்கப்பட்ட பொல்லாத பொய் நூல்கள். இதனைப்பற்றி அதிகம் கூறவில்லை. எடுத்துக் காட்டாக இங்கு ஒன்று தருகின்றோம். இது மச்சபுராணத்தில் சிவன் கூறியதாகச் சொல்லப்படுகின்றது.

"இராக்கதர் அசுரர், தைத்தியர் தானவர் ஒரு புறமும், தேவர் ஒருபுறமுமாக நின்று பொருதபோரில் ஆயிரக் கணக்கான தானவர் அசுரர் முதலியோர் மாண்டனர். இந்திரன், தானவர் ஆதியோரின் மனைவியரை நோக்கிப் பின்வருமாறு கூறுகின்றான். நீங்கள் அரசரையும் உங்கள் எசமானரையும் சூத்திரரையும் ஒரேவகையாகக் கருதி ஒழுகவேண்டும். அப்பொழுதுதான் உங்களுக்குச் செல்வம் உண்டாகும். வறிய ஆடவராயினும் போதுமான பொருள் கொண்டுவந்தால் அவர்களுடன் கூடிக் குலாவவேண்டும்; கெம்பீரமாக வருபவர்களுக்குப் போகம் கொடுத்தல் ஆகாது நீங்கள் பிதிர்களையும் தேவர்களையும் வழிபடும்போது, பொன், தானியம், பசு, நிலம் முதலியவைகளைப் பிராமணருக்குத் தானமாகக் கொடுக்க வேண்டும். பிராமணர் சொல்வதுபோல எல்லாரும் கேட்டு ஒழுகவேண்டும். நீங்கள் கடைத்தேற வேண்டுமாயின், கட்டாயமாக ஒழுகவேண்டிய சில விதிகளைக் கூறுகின்றேன். நீங்கள் வாழ்க்கையின் துன்பக்கடலைத் தாண்டுவதற்கு வேதங்களைக் கற்றறிந்தவர், வகுத்துள்ள சட்டம் வருமாறு: பெண்களாகிய நீவிர் ஞாயிற்று வாரத்தில இலைகுழை அவித்த நீரில் நீராடவேண்டும். பின்பு வேதாந்தம் அறிந்த கட்டழகனாகிய பிராமணனைச் சந்தனம், பூ, வாசப்புகை என்பவைகளை வைத்து வழிபடவேண்டும். பின்பு சில பிராமணருக்குப் பச்சை அரிசியும், முட்டி நிறைந்த வெண்ணெயும் கொடுக்க வேண்டும். முன் கூறிய வேதாந்த மறிந்த பிராமணனுக்கு நல்ல விருந்து இட்டு, அவனைக் காமனாகக் கருதி வழிபடவேண்டும்.

அப்பிராமணனுக்குப் போகத்தில் எப்படி இச்சையோ, அப்படி யெல்லாம் புன்முறுவலோடு அவனைத் திருப்தி பண்ணவேண்டும். இவ்விரதம் பிடிப்பவள் பதின்மூன்று மாதம் பிராமணருக்குப் பச்சையரிசியும், முட்டிநிறைந்த வெண்ணெயும் கொடுத்து வர வேண்டும். அக்கால முடிவில் அவனுக்கு மெத்தைதலையணை, படுக்கைக்கு விரிக்கும் துப்பட்டி, விளக்கு, மிதியடி, செருப்பு, இருப்பதற்குப் பாய் முதலியவைகளைத் தானமாக வழங்க வேண்டும்.

பின்பு பிராமணனையும மனைவியையும அழைத்துப் பொன் நூல, மோதிரம், பட்டாடை, பொன்வளை, பூமாலை, சந்தனம் முதலியவைகளைக் கொடுத்து அவர்களைக் கனமபண்ணி வழிபட வேண்டும். பின்பு தங்கத்திலை கண்வைதத காமன், இரதி என் னும் பாவைகளைத் தட்டத்தில் வைத்து, இனிப்புப் பண்டங்கள், பால் மாடு, வெண்கலப் பாத்திரம், கருப்பங்கழி, என்பவைகளை வைத்துக் கொடுக்கவேண்டும். அப்போது விட்டுணு மகிழ்ந்து வேண்டியவைகளைக் கொடுப்பார்

பின்பு அவனைச் சுற்றிவந்து குமபிட்டு அவனை வீட்டுக்கு அனுப்பவேண்டும். படுக்கை முதலியவைகளை அவன் வீட்டுக்கு அனுப்பி வைக்கவேண்டும். அதுமுதல் ஞாயிற்றுக்கிழமை தோறும் கூடிச் சுகம் அனுபவிக்க வரும் பிராமணனை மரியாதை செய்து கனம் பண்ணவேண்டும். இப்படிப் பதின்மூன்று மாதங் களுக்கு அவனைத் திருப்தி பண்ணவேண்டும. அந்தப் பிராமண னுடைய விருப்பத்தின்பேரில் இன்னொருவன் வந்தால் ஐம்பத் தெட்டு லீலைகளாலும் அவனை மகிழ்விக்க வேண்டும்.

வியபிசாரிகளுக்குப் பாவம் உண்டாக மாட்டாத அரிய விரதத்தைப்பற்றி உங்களுக்குச் சொன்னேன். இதனையே இந்திரன் தானவர்களின் மனைவியருக்குச் சொன்னான் (என்று சிவன் சொன்னார்) ஓ அழகிய பெண்களே! இவ்விரதம் பாவங் களை ஓட்டிப் பல நன்மைகளைத் தரவல்லது. நீங்கள் நான் சொன்ன வண்ணம் செய்ய வேண்டும் என்று விரும்புகிறேன்.

அமாவாசையின் பின் ஆறுவது நாள் பிடிக்கும் விரதத்தில் பிராமணரைப் பக்தியோடு வழிபட வேணடும், வழி

படுகின்றவன் படுக்கைக்குப் போகுமுன் பசு மூத்திரம் குடிக்க வேண்டும். காலையில் எழுந்து குளித்துத் தோய்ந்தபின் பிராமணருக்கு விருந்திட வேண்டும். பின்பு அவர்களுக்குப் பொன்னாற் செய்த தாமரைப் பூ கொடுக்கவேண்டும். அதோடு ஒரு சிவப்புப் பட்டாடையும் தானம் பண்ணவேண்டும்.[1] —மச்ச புராணம்.

இவ்வகையான விரதத்தை எவர் முன்னிலையிலாவது ஒருவர் இன்று சொன்னால், அவர் தண்டனையடையாமல் தப்பிவருவது அரிது. இவ்வகை நீதியையும் விரதத்தையும் கடவுள் சொன்னார் எனக் கூறும் நூலைப்பற்றி நாம் கூறுவதற்கு ஒன்றுமில்லை.

## கணவனிறந்த பெண்களை உயிரோடு கொளுத்தும்படி கூறும் வேத மதம்

இறந்தவர்களோடு அவர்கள் பயன்படுத்திய பொருள்கள், அடிமைகள், நாய்கள், குதிரைகளையும் உடன் வைத்துப் புதைத்தல் அல்லது கொளுத்தலாகிய வழக்கு இவ்வுலக மக்கள் பலரிடையில் காணப்பட்டது. இதற்குக் காரணம், அக்கால மக்கள் இறந்தவர்களின் மறு உலகத்துணைக்கு அப்பொருள்களும், பிறவும் பயன்படும் என்று கருதினமையாகும். மக்கள் அறிவு வளர்ச்சியடைந்த காலத்தில், பெண்கள் சிலர் கணவர் இறந்தபோது தீயில் பாய்ந்து தற்கொலை புரிந்து கொண்டார்கள். அவர்கள் தற்கொலை செய்ய வேண்டும் என்னும் கட்டாயம் இருக்கவில்லை. கிரியைகளையே தமது வாழ்க்கைப் பிழைப்பாகக் கொண்டிருந்த பிராமணர், கணவர் இறந்தபோது பெண்கள் சிலர் தற்கொலை புரிவதை வாய்ப்பாகக் கொண்டு, அவ்

[1]Matsya purana chaper L X X I p p. 213,213,222—Sacred books of the East edited by Basu I. M. S.

[2]The burning of widows—William Johns—1816

வாறு செய்வதற்குச் சில கிரியைகளை வகுத்துத் தமது சமய நூல்களிலும் அதனை வற்புறுத்தி எழுதிவைப்பா ராயினர். அதனால் காலத்தில், கணவனை இறந்த பெண் கள், தற்கொலை புரியவேண்டும் என்னும் கட்டாயம உண்டாயிற்று. பெண்கள தமது உயிருககஞ்சியும், தீயில் உயிரோடு வேகபபோகும துனபத்துக்குப பயந் தும், கதறித் துடிககத் துடிக்க அவாகள், வலிதில் பிடித்து இழுத்துக் கணவனின பிரேதத்தோடு கிடத் தித் தீமூட்டிக் கொளுத்தபபட்டார்கள ஒருவனைக் கொலை செயதால் இனறு ஆஙகில ஆட்சியில் என்ன தண்டனை விதிக்கப்படுகினறதெனை எல்லோரும அறிந் ததே. இக் கொடிய செயல்களை நேரில் பார்த்த மேல் நாட்டவர்கள மிகவும மனவேதனையோடு, பெண்களைப் பிராமணா தீயிலிட்டுக் கொளுத்தும கொடுமையைப பற்றி எழுதியுளளார்கள. முதற்கண் ஆரிய நூல்களில் பெண்களைக் கொளுத்துவதறகு அனுமதிக்கும் சட்டங் கள் சிலவற்றை இஙகுத் தருகினறோம.

[1]சுருதிசங்கிரகம என்பது பிராமணரின் சாத்திரங் களிலிருந்து திரட்டப்பட்ட சட்டஙகள. அந்நூலி லிருந்து 1799-ல் விதவைகளைக் கணவனோடு உடன் கட்டை ஏற்றுவதற்கு அனுமதிககும சட்டங்கள தொகுக்கபபட்டுளளன. அவற்றுட் சில பின வருவன:

கணவன் இறந்த பினபு அவனோடு நெருப்பில் எரிந்து இறக்கினறவள் சுவர்க்கத்தை அடைகின்றாள. கணவன் இறக்கும்போது அவள ஒரு நாள வழிப்பய ணத்துக்கு அப்பால் இருந்தால் பிரேதத்தை எரிக் காமல் ஒரு நாள் பொறுத்திருக்கலாம்—அங்கீரர்.

மனைவி கணவனோடு உடன்கட்டை ஏறினால், அல் லது தற்கொலை செய்துகொண்டால், அவளுடைய சுற்

---

[1] Burning of widows—wielliam johns—1816

றதந்னா மூனறு நாள தீட்டுககாககவேணடும. அதன பினபு சிரார்த்தம செய்யவேண்டும. அவள உடனே கணவனின மரணத்தைப பறறி அறியாவிட்டாலும, உடனகட்டை ஏருவிடடாலும, தீட்டுக்குரிய நாட்கள் கழிந்த பின நெருப்பில் விழுந்து இறந்து போகவேண டும. அவள் அவ்வாறு தனியே இறந்தால் மூன்றுநாட் கழித்து சிராாதத பிணடம போடவேண்டும—இருக்கு வேதம்.

ஒருவன் வறியவனுக அல்லது பாவியாக இருநத போதிலும மனைவி உடனகடடை ஏறிஞல், அவனுடைய பாவஙகள உடனே பறந்து போகும. மனைவி கருப்ப மாக இருந்தாலும, குழந்தையுடையவளா யிருந்தாலும அவள கணவனுடன இறககவேணடியதில்லை. குழந்தை யைப் பாதுகாபபதறகு வேறு யாரேனும இருந்தால், அவள உடனே உடனகட்டை ஏறலாம. ஒருத்தி பிரே தத்தைக கொளுத்தும விறகின மேல் ஏறிச் சாவுக்குப பயந்து தப்பி ஓடிஞல், அவள பிரசாபதியா எனனும கடிய விரதம பிடிக்கவேணடும—விட்டுணு புராணம்.

மனித உடலில் 35,000,000 மயிர்கள உள்ளன. மனைவி கணவனோடு உடன்கட்டை ஏறிஞல், உடலில் எத்தனை மயிா உளளனவோ, அவ்வளவு காலம அவள் மோட்சத்தில் இருப்பாள. பாம்புப்பிடாரன் எப்படிப் பாம்பைப் புற்றிலிருந்து இழுத்தெடுககிறுனே, அப் படியே உடன்கட்டை ஏறிய பெண் கணவனை நரகத்தி லிருந்து இழுததெடுக்கிறுள. அவள் தனது கணவனுடைய குடும்பத்தினர், தாய, தந்தை முதலிய வர்களைப் புனிதமடையும்படி செய்கிறுள். உத்தம பெண்ணுக்குக் கணவனோடு இறப்பதைவிடச் செய்யத்

தக்க வேறு நல்ல செயல் யாதும இல்லை. எல்லாப் பிறவிகளிலும கணவனோடு இறப்பவள் பெண் விலங்காகப பிறக்கமாட்டாள்—அங்கீரர்.

கணவன் இனனொரு தேசத்தில் இறந்தானானல் மனைவி, அவனுடைய செருப்பை எடுத்து மாரபோடு வைத்துக் கட்டிக்கொண்டு நெருபபில் விழகக்டவள—பிரம புராணம்.

கணவனோடு உடனகட்டை ஏறினால அவள மூன்றரைக்கோடி ஆண்டுகள சுவர்க்கத்தில் இருப்பாள். அப்படி அவள் சாகாவிட்டால் அவள் தனது கற்பைக் காக்கவேண்டும். அல்லாவிடில் அவள் நரகத்துக்குப் போவாள்—ஆரிய நீதி சாத்திர பண்டிதர்.

வில்லியம யேமஸ் என்பவர் "விதவைகளைத் தீயிலிடுதல்" என னும் நூலில் எழுதியிருபபது வருமாறு:

"சில இடஙகளில் கருப்பவதிகளும, பருவம் அடையாத பெண்களும் எரிககப்பட்டார்கள. அவர்கள மயக்க மருந்து கொடுத்தபின், மயக்கத்திலிருக்கும போதே கட்டையில் வைத்துக் கொளுத்தபபட்டார்கள. உடன்கட்டை ஏற்றுமபோது அவள எழுந்து ஓடிவிடாதபடி, பிராமணர் அவள அரையிற் கயிறுமாட்டிக் கட்டி விடுகிறார்கள் தீக்கொளுத்தும்படி கூறினதும [illegible] பிராமணர் தீக்கொளுத்தி விடுகிறார் [illegible] நிற்பவர்கள் எல்லோரும் [illegible] யில் சொரிவார்கள். எரிந்து முடிந்[illegible]டன் பிராமணர் சாம்பலைக் கிளறிப் பெண் அணிந்திருந்த நகைகளைப் பொறுக்கி எடுத்துக் கொளளுவார்கள். அவை அவர்களுக்கே உரியது." 1924-ல் மார்வாரில் இராசா அசிற்சிங் இறந்தபோது அறுபத்து நான்கு பெண்கள் கட்டை

யில் ஏறினார்கள். இராசா பட்சிங் நீரில் அமிழ்ந்தியபோது 84 பெண்கள கட்டையில் ஏறினார்கள். 1611-ம் 1620-ம் மதுரை நாயக்கர் இறந்தபோது முறையே 400, 700 பெண்கள் கட்டை ஏறினாகள. கட்டை கிடங்குக்குள் அடுக்கபபட்டது. இவவாறு செயவது உடன்கட்டை ஏற்றபபடும பெண்கள தபபி ஓடாமல் இருப்பதற் காகும். கூர்ச்சரத்தில் 12 அடி சதுரமான கொட்டிலில், பிணம் கொளுததப்பட்டது. உடன் கட்டை ஏறும் பெண் கொட்டிற்கால் ஒன்றோடு கட்டபபட்டாள். வங் காளத்தில் பெண்கள் தரையில் முளை அடித்துக் கட் டபபட்டார்கள். சில சமயஙகளில் உடனகட்டை ஏற வரும பெண்கள் முதுகுகாட்டி ஓட்டம எடுப்பதுமுண்டு அவ்வகையினர் தீண்டாதவர்களாகக் கருதப்பட்டனர். அவர்கள் குடுமபத்தில் மறுபடியும அனுமதிக்கப்பட மாட்டார்கள். இவ்வாறு ஓடும் பெண்களைக் கொண்டு போவதற்கு புலையர் கூட்டமாக வந்து நிற்ப துண்டு. சில ஐரோபபிய வணிகா அவவாறு ஓடுகின்ற ரைக் காப்பாற்றி மணஞ்செய்து கொள்வதுண்டு. வில்லியம பெனரிக என்பவர் இவ்வழக்கத்தைத தடுக் கும சட்டத்தை 1829-ல் வெளியிட்டாா. 800 பிராமணர் இது சமயத்துக்கு மாறானது எனறு சொல்லிக் கை யெழுத்திட்டுப் பிறிவிகவுஞ்சிலுககு அப்பீல் செயதார் கள. அவவப்பீல 1832-ல தளளபபட்டது. பிராமணா இவ்வழக்கத்தை வறபுறுத்தியது கணவனை இழந்த பிராமணப் பெண்களின் ஒழுக்கத்தைக் காபபாற்ற முடி யாமையால் ஆகும்.[2] கேட்டால் திடுககிடும் பல நிகழ்ச்சி

[1] The position of women in Hindu civilization—Dr. A. S. Altekar. M. A. LL. B. D. Litt.

[2] The reasons for Brahman legislators gradually giving religious sanction to this horrible custom are that porobably they found it more difficult to prevent moral lapses in

கள் கூறப்பட்டுள்ளன. அவைகளை இச் சிறு நூலில் எழுத இடம்பெறா. இராசாராம மோகன்ராய் என்னும் அறிவாளி இப்பைத்தியக்காரத்தனத்தை ஒழிக்கப் பெரிது முயன்று வெற்றி பெற்றார். ஆங்கில அரசாங்கம் உடன்கட்டை ஏறுவதோ, ஏற்றுவதோ சட்டத்துக்கு மாறு என்று விளம்பரஞ் செய்தது.

பிராமணர் தமது சமயம் கெட்டுவிட்டது என்று துடித்துக் கதறினார்கள். ஆங்கில அரசாங்கம் செவி கொடுத்திலது. இன்று கைம்பெண்கள் உடன்கட்டை ஏறுமையால் ஒன்றும் முழுகிப்போகவில்லை. அரசாங்கத்தை எதிர்க்க வலியற்ற பிராமணக்குழாம் உடன்கட்டைக்குப் பதில் தலையை மொட்டை தட்டவேண்டும் எனச் சட்டம் செய்தது. இக் கொடிய சட்டத்தையும் "கிரிமினல் குற்றமாகக்" கொள்ளாமல் அரசினர் இருப்பது வியப்புக்குரியதே. மனித சமூகத்தைக் கெடுக்கும் செயல்கள் எல்லாம் "கிரிமினல்" குற்றங்களாகக் கொள்ளப்படுதல் தகுதி யுடையதாகும்.

"வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர
உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக் கொரு நீதி"

—மனோன் மணீ.

73060

Royal Printing Works, Mount Road, Madras. M.S. 175 C. 20
Published by M Chakravarti Nainar, for C.I.P. House
Q. H. No. M. S. 459 Madras கட்டை